# திருக்கோயில்



ஆகஸ்ட்
1999

விலை
ரூபாய் ஐந்து





திருக்கழுக்குன்றம் ''தாழக்கோயில்'' என வழங்கும் அருள்மிகு பக்தவத்சலேசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 5.7.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்களும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு சுகுமாரன், இ.ஆ.ப. அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். வேலூர் இணை ஆணையாளர் திரு ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல்., காஞ்சிபுரம் உதவி ஆணையாளர் திரு பி. வாசுநாதன், எம்.ஏ., பி.எல். மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் திரு இராஜேந்திரன் மற்றும் அறங்காவலர் பெருமக்கள் ஆகியோர் திருக்குட நீராட்டுப் பெருவிழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

# திருக்கோயில்





திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரம்மாதி ஆண்டு ஆடி | மணி |
|---|---|---|---|
| 41 | | ஆகஸ்ட் 1999 | 8 |


**சிறப்பாசிரியர்**

திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

**ஆசிரியர்**

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்
(பொறுப்பு)

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


**முகப்பு**

கொடுமுடி அருள்மிகு மகுடேசுவரர்
மற்றும் வீரநாராயணப்பெருமாள்
திருக்கோயில் முன்புறத் தோற்றம்

**பொருளடக்கம்**


*அருள்மிகு மாரியம்மன் போற்றி*

*கழுகுதொழு வேதகிரி*
- சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்
அவர்கள்

*"விபீஷணர் சோதரி"*
- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

*பிரதோச மகிமையும் தத்துவமும்*
- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி
அம்மையார்

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*திருவெள்ளக்குளத்துள் அண்ணா*
- திருமதி ஜெ. அனுசுயா, எம்.ஏ., எம்ஃபில்

*பிள்ளை லோகாச்சாரியர்*
- திருமதி கோமதி ராகவன்

*ஒரு சிக்கலும் தீர்வும்*
- முனைவர் இரா. செல்வக்கணபதி

*ஸ்ரீ சாரதா புஜங்கம்*
- பாரதி தீர்த்ததாசன்

*சைவமும் தமிழும்*
- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

*பெரிய புராணத்தில் பண்பாட்டுச் சிறப்பு*

*வினாவும் விடையும்*
- டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# அருள்மிகு மாரியம்மன் போற்றி

### தமிழ் அருச்சனை - அருள் வேண்டுதல் (சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில்...... அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும்

உம் திருவடிகளில் மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

### அருள்மிகு மாரியம்மன் 8 போற்றிகள்

1. ஓம் அண்ணாமலையில் அமர்ந்தாய் போற்றி
2. ஓம் ஆற்றுமணல்லிங்கம் அமைத்தாய் போற்றி
3. ஓம் எங்கும் நிறைந்த நிறைவே போற்றி
4. ஓம் சந்நிதிக் கெல்லாம் சந்நிதி போற்றி
5. ஓம் சமயபுரத்தின் தமிழே போற்றி
6. ஓம் நாகக்குடையில் நடப்பாய் போற்றி
7. ஓம் மழையாய் விளங்கும் மாரி போற்றி
8. ஓம் வேம்புரதம் ஏறும் வித்தகி போற்றி போற்றி

### அருள்மிகு மாரியம்மன் 16 போற்றிகள்

1. ஓம் அண்ணாமலையில் அமர்ந்தாய் போற்றி
2. ஓம் அலகு அணிந்தார்க்கு அருள்வாய் போற்றி
3. ஓம் அனலும் தணலும் ஆவாய் போற்றி
4. ஓம் ஆதியில் உமையாய் ஆனாய் போற்றி
5. ஓம் ஆறு ஆதாரமாம் அணங்கே போற்றி
6. ஓம் உடுக்கையில் பாம்பை உயர்த்தாய் போற்றி
7. ஓம் எல்லா உலகும் ஈன்றாய் போற்றி
8. ஓம் ஓங்காரம் என்னும் உருவே போற்றி
9. ஓம் சிங்கம் ஏறும் சீரே போற்றி
10. ஓம் சூனியம் எல்லாம் சுடுவாய் போற்றி
11. ஓம் செடிலும் தேரும் சிறப்பாய் போற்றி
12. ஓம் தேகமெல்லாம் முத்தெடுக்கும் தேவி போற்றி
13. ஓம் மணி மந்திர சேகரித்தாயே போற்றி
14. ஓம் வந்தமனை வாழ வருவாய் போற்றி
15. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி
16. ஓம் வேம்புரதம் ஏறும் வித்தகி போற்றி போற்றி

### அருள்மிகு மாரியம்மன் 108 போற்றிகள்

1. ஓம் அண்ணாமலையில் அமர்ந்தாய் போற்றி
2. ஓம் அலகு அணிந்தார்க்கு அருள்வாய் போற்றி
3. ஓம் அலர்மேலு மங்கையும் ஆனாய் போற்றி
4. ஓம் அறுகோணத்து உள்ளிருக்கும் ஆதி போற்றி
5. ஓம் அனலும் தணலும் ஆவாய் போற்றி
6. ஓம் அன்னம் அளிக்கும் அன்னமே போற்றி
7. ஓம் ஆதிசிவன்தேவி அம்மையே போற்றி
8. ஓம் ஆதியில் உமையாய் ஆனாய் போற்றி
9. ஓம் ஆயிரம் கண்ணுடை அம்மா போற்றி
10. ஓம் ஆரணிப் பாளையத்து அம்மா போற்றி
11. ஓம் ஆறுதப்பு நூறுபிழை பொறுப்பாய் போற்றி
12. ஓம் ஆறு ஆதாரமாம் அணங்கே போற்றி
13. ஓம் ஆற்று மணல் லிங்கம் அமைத்தாய் போற்றி
14. ஓம் ஈசன் பங்கில் இருப்பாய் போற்றி
15. ஓம் உடுக்கையில் பாம்பை உயர்த்தாய் போற்றி
16. ஓம் உன்னைப் பணிந்தவர்க்கு உற்ற துணை போற்றி
17. ஓம் ஊத்துக்காட்டின் உறவே போற்றி
18. ஓம் எங்கும் நிறைந்த நிறைவே போற்றி
19. ஓம் எச்சிலும் தீட்டும் ஏற்பாய் போற்றி
20. ஓம் எட்டெழுத்தாகி இனிப்பாய் போற்றி
21. ஓம் எல்லா உலகும் ஈன்றாய் போற்றி
22. ஓம் எல்லார்க்கும் தாயாய் இருப்பாய் போற்றி
23. ஓம் ஏழையர்க்கு அடைக்கலம் ஆனாய் போற்றி
24. ஓம் ஒப்பேதுமில்லா உயர்வே போற்றி
25. ஓம் ஓங்காரமென்னும் உருவே போற்றி
26. ஓம் கச்சிப்பதியின் காமாட்சி போற்றி
27. ஓம் கடும்பாடி எல்லையெலாம் காப்பாய் போற்றி
28. ஓம் கடைக்கண் நோக்கம் அருள்வாய் போற்றி
29. ஓம் கண்ணபுரத்தின் காரணி போற்றி
30. ஓம் கரகத்தில் அமரும் கருமாரி போற்றி
31. ஓம் கலியுகம் கண்ட திரிபுரை போற்றி
32. ஓம் கற்பகம் அருளும் காமதேனு போற்றி
33. ஓம் கனகசபை நடத்தும் கபாலி போற்றி
34. ஓம் காசிவள நாட்டிலே கன்னியாகுமரி போற்றி
35. ஓம் குப்பத்திருக்கும் கொலுவே போற்றி
36. ஓம் கும்பத்தின் மீதிருந்து கொஞ்சுவாய் போற்றி
37. ஓம் கைலாசத்தின் காவலே போற்றி
38. ஓம் கோலியனூரின் கொலுவே போற்றி
39. ஓம் சந்நிதிக்கெல்லாம் சந்நிதி போற்றி
40. ஓம் சந்தேகம் நீக்கும் சாயுச்சியே போற்றி

41. ஓம் சப்தகன்னியாய்ச் சமைந்தாய் போற்றி
42. ஓம் சமயபுரத்தின் தமிழே போற்றி
43. ஓம் சாம்பிராணி வாசமாய்ச் சார்வாய் போற்றி
44. ஓம் சிங்கம் ஏறும் சிறப்பே போற்றி
45. ஓம் செக்கச் சிவந்த சிங்காரி போற்றி
46. ஓம் செடிலும் தேருமாய்ச் சிறப்பாய் போற்றி
47. ஓம் சூலம் ஏந்தும் சுடரே போற்றி
48. ஓம் சூனியம் எல்லாம் சுடுவாய் போற்றி
49. ஓம் சேலம் கோட்டைச் சிறப்பே போற்றி
50. ஓம் தண்டு மாரியாய்த் தழைப்பாய் போற்றி
51. ஓம் திண்டுக்கல் கோட்டையில் திளைப்பாய் போற்றி
52. ஓம் திருநீற்றுக்கோட்டைத் திகம்பரி போற்றி
53. ஓம் திருவிளக்கின் நாயகத்திறமே போற்றி.
54. ஓம் திருவேற்காட்டுத் தேவி போற்றி
55. ஓம் தில்லைவனத்தின் திருவே போற்றி
56. ஓம் தீராவினையெல்லாம் தீர்ப்பாய் போற்றி
57. ஓம் தெய்வக் கொலுவில் திளைப்பாய்போற்றி
58. ஓம் தேகமெல்லாம் முத்தெடுக்கும் திருவே போற்றி
59. ஓம் தேசமெல்லாம் முத்தெடுக்கும் திருவே போற்றி
60. ஓம் நம்பினோர் நாவில் நவில்வாய் போற்றி
61. ஓம் நாகக்கன்னியே நல்லமுத்து போற்றி
62. ஓம் நாகக்குடையில் நடப்பாய் போற்றி
63. ஓம் நாகம் அணிந்த நங்கை போற்றி
64. ஓம் நாடும் வீடும் காப்பாய் போற்றி
65. ஓம் நாற்கோணச் சக்கரத்தை நாடுவாய் போற்றி
66. ஓம் நித்தியகல்யாணி நீலிபரஞ்சோதி போற்றி
67. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி
68. ஓம் நோவுநொடிக்கோர் மருந்தே போற்றி
69. ஓம் பகைத்தவர் மார்பைப் பிளப்பாய் போற்றி
70. ஓம் படவேட்டில் அமர்ந்த பராசக்தி போற்றி
71. ஓம் பட்டத்தழகி படைமுகத்தாய் போற்றி
72. ஓம் பண்ணாரி வாழும் பராபரி போற்றி
73. ஓம் பாதாளம் எல்லாம் பரந்தாய் போற்றி
74. ஓம் பார்வதியாகிப் பரிந்தாய் போற்றி
75. ஓம் பாவாடைக்காரி பராபரியே போற்றி
76. ஓம் பில்லி பிசாசுகள் அகற்றுவாய் போற்றி
77. ஓம் பிள்ளை வரம் தரும் பெரியாய் போற்றி
78. ஓம் புவனமெலாம் போற்றும் பூவழகி போற்றி
79. ஓம் பூரணமாகிய பொலிவே போற்றி
80. ஓம் பூவாய்ச் சொரியும் புதுமையே போற்றி

★★★

81. ஓம் பெரியபாளையத்தின் பேச்சியே போற்றி
82. ஓம் பெருமாளின் பின்னே பிறந்தாய் போற்றி.
83. ஓம் மக்களுக்கு உகந்த மாதரசி போற்றி
84. ஓம் மகுடமுடி கொண்ட மனோன்மணி போற்றி
85. ஓம் மங்கை உருவின் மகராசி போற்றி
86. ஓம் மணி மந்திர சேகரித்தாயே போற்றி
87. ஓம் மணிவிளக்குமேல் ஏறும் மாதா போற்றி
88. ஓம் மலையனூர் மகிழ்ந்த மாண்பே போற்றி
89. ஓம் மலையாள தேசத்து மகமாயி போற்றி
90. ஓம் மழையாய் விளங்கும் மாரி போற்றி
91. ஓம் மாங்கல்யம் காக்கும் மங்கலி போற்றி
92. ஓம் மாயி மகமாயித்தாயே போற்றி
93. ஓம் முக்கோணத்துள் மூலப்பொருளே போற்றி
94. ஓம் முத்துவடம் அசையும் முலைப்பால் போற்றி
95. ஓம் மூலாதாரத்தின் முதல்வி போற்றி
96. ஓம் யாதும் ஆகி நின்றாய் போற்றி
97. ஓம் வணங்குவோர்க்கு வாழ்க்கை அளிப்பாய் போற்றி
98. ஓம் வந்தமனை வாழ வருவாய் போற்றி
99. ஓம் வருத்தம் தீர்க்கும் வளமே போற்றி
100. ஓம் வலியோர் மார்பைப் பிளப்பாய் போற்றி
101. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி
102. ஓம் வாதபித்த சீதசுரம் நீக்கிக் காப்பாய் போற்றி
103. ஓம் வார்ப்புச் சிலையாய் வருவாய் போற்றி
104. ஓம் வீராம்பட்டணத்து விளக்கே போற்றி
105. ஓம் வெள்ளிக்கிழமை விளைவே போற்றி
106. ஓம் வேப்பம் பாலாய் விளைவாய் போற்றி
107. ஓம் வேப்பிலை செய்யும் விந்தையே போற்றி
108. ஓம் வேம்புரதம் ஏறும் வித்தகி போற்றி போற்றி.

### பாடல் - அருள்மிகு மாரியம்மன்

அந்தந்தத் திருத்தலத்திற்குச் சிறப்பாக உள்ள அருள்மிகு மாரியம்மன் பாடலுடன் 108 போற்றியை நிறைவு செய்திடல் வேண்டும்.

### வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு ....... மாரியம்மன் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்கலம் உண்டாகும்.

# கழுகுதொழு வேதகிரி

- சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

''காதல்'' எனும் தமிழ்ச் சொல்லுக்கு மிக்க விருப்பம், இணையற்ற அன்பு என்பது பொருள் ஆகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளாகிய சிவபெருமான், மிக்க விருப்பத்துடன் விரும்பி உறைகின்ற ஒப்பற்ற திருத்தலமே நான்கு வேதங்களும் நான்கு சிகரமாக - அச்சிகரத்தின் உச்சியில் சுயம்புவாய்ச் சுடர்க் கொழுந்தாய் இறைவன் எழுந்தருளித் திருவருள் பாலிக்கும் திருக்கழுக்குன்றம் திருத்தலமாகும்.

சமய குரவர்கள் நால்வரும் இத்திருக்கழுக்குன்றத் திருத்தலத்தின் மகிமையை நன்கு உணர்ந்து போற்றியுள்ளார்கள். திருஞானசம்பந்தர் தாம் பாடியுள்ள தேவாரத் திருப்பதிகத்தில் பாடல்தோறும் இறைவன் மிகவிரும்பி உறையும் திருத்தலம் திருக்கழுக்குன்றமே ஆதலை உணர்த்திடும் வகையில்

''நள்ளிருள் ஏம நடமாடும்
காடுடையான் காதல் செய் கோயில் கழுக்குன்றே''

''பெண்மகள் தன்னை ஒருபாகம்
காணவல்லான் காதல் செய் கோயில் கழுக்குன்றே''

''வையகத்தார்கள் தொழுதேத்தும்
கானகத்தான் காதல் செய் கோயில் கழுக்குன்றே''

''விலங்கெயில் மூன்றும் எரியுண்ணக்
கணையல் செய்தான் காதல்செய் கோயில்
கழுக்குன்றே''

''மறிசேர்ந்த
கையுடையான் காதல் செய் கோயில் கழுக்குன்றே''

''காலனைக்
கடந்தபெம்மான் காதல் செய் கோயில் கழுக்குன்றே''

என்று சிறப்பித்துச் சுட்டியிருப்பதோடு, திருக்கடைக்காப்பு எனும் இறுதிப் பாடலிலும்

**''கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை**
நண்ணியசீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடிய பத்துமிவை வல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே''

என்று கண்ணுதலான் காதல் செய்யும் திருக்கழுக்குன்றத்தை நாமும் காதல் செய்து வழிபடுதல் வேண்டும் என வலியுறுத்தியிருத்தலைக் காணுகின்றோம்.

திருநாவுக்கரசு சுவாமிகளும் திருக்கயிலாயத்திற்கு இணையானது திருக்கழுக்குன்றம் என்பதை உணர்த்திடும் வகையிடும் தாம் பாடியுள்ள தேவாரப் பாடல்களில் ''கயிலாயத்து உச்சியாய்'' எனவும் ''கழுக்குன்றத்து உச்சியாய்'' எனவும் இவ்விரண்டு மலைகளின் உச்சியை மட்டுமே உவந்து போற்றியிருத்தலைக் காணுகின்றோம். திருநாவுக்கரசர் முத்திப்பேறு அடைந்த திருத்தலம் திருப்புகலூர்; அவ்வாறு முத்திப் பேறு பெற்றுய்ந்த அவ்விறுதி நேரத்தில் அவர் மறவாது போற்றியது கழுக்குன்றத்தில் மலைக் கொழுந்தாகவுள்ள வேதகிரீசுவரப் பெருமானையே என்பதும்

''கழுக்குன்றத்து உச்சியாய் கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்''

எனப் பாடியிருப்பது கொண்டு, பூம்புகலூரில் வீற்றிருந்த போதும் திருநாவுக்கரசர் காதலித்திருந்த திருத்தலம் திருக்கழுக்குன்றமே ஆதலை நாம் தெளிந்துணர முடிகின்றது.

திருக்கழுக்குன்றத்து இறைவர் தம் அடியார்க்கு வேண்டுவதெல்லாம் வழங்கியருளும் கற்பகம் என்பதையும் திருநாவுக்கரசரே


''காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே''

என்று பாடியிருத்தலால் நாம் அறியலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ஒருமுறையன்றிப் பலமுறையும் சென்று திருக்கழுக்குன்றத்தைத் தொழ வேண்டும் என்று வற்புறுத்தும் வகையில்

''சென்று சென்று தொழுமின் தேவர்பிரான் இடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக்குன்றமே''

என்று பாடுகின்றார். மேலும் அவரே



''இறங்கிச் சென்று தொழுமின்''
''நீளநின்று தொழுமின்''
''புலைகள் தீரத்தொழுமின்''
''வெளிறு தீரத் தொழுமின்''
''பிழைகள் தீரத் தொழுமின்''
''தொழுவாரைத் தொழுமின்''

எனத் திருக்கழுக்குன்றத்தைத் தொழுது வரும் அடியாரையும் தொழுவது சால நன்மைகளைத் தரும் என விளக்கியிருத்தல் ஈண்டு நினைந்து மகிழத்தக்கது.

திருப்பெருந்துறையில் குருவடிவாக வந்து மாணிக்க வாசகரை ஆட்கொண்ட பெருமான், திருக் கழுக் குன்றில் மீளவும் வந்து தம் அருட்கோலங்கள் பலவும் காட்டி மாணிக்கவாசகருக்குத் திருவடி தந்து ஆட்கொண்ட சிறப்பினை அவரே

''பிணக்கிலாத பெருந்துறைப் பெரு
மான் உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாததோர் இன்பமே வரும்
துன்பமே துடைத்தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல் விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

எனப் பாடியிருப்பது கொண்டு மாணிக்கவாசகரும் பெரிதும் காதல் செய்து போற்றும் திருத்தலம் திருக் கழுக்குன்றம் ஆதலைத் தெளியலாம். மாணிக்க வாசகர் அமைத்து வழிபட்ட ''திருவடிக் கோயில்'' இன்றும் திருக்கழுக்குன்றத்தில் சிறப்புடன் திகழ்ந்து வரக் காண்கின்றோம்.

நால்வரால் இவ்வாறு போற்றப்பட்டுள்ள திருக்கழுக்குன்றம் திருக்கோயில், நான்கு யுகங்களிலும் சிறப்புற்றிருந்த திருக்கோயில் என்பதைத் தல புராணம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

கிருதயுகத்தில் சண்டன், பிரசண்டன் எனும் முனிவர்கள் இருவர் முன்வினைப் பயனாய் கழு குருவம் பெற்று வேதகிரி தொழுது, முத்தி பெற்றுள்ளனர்.

திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயு எனும் கழுகுகள் வேதகிரி தொழுது இழந்தபலம் மீண்டும் பெற்று இராம கைங்கரியத்தில் ஈடுபட்டு முத்தி பெற்றுள்ளனர்.

துவாபரயுகத்தில் சிவம் பெரிதா, சக்தி பெரிதா எனும் வாதத்தில் ஈடுபட்ட சம்புகுத்தன், மாகுத்தன் எனும் தவமுனிவர் இருவர், சிவபெருமானே வாதத்தைக் கைவிடுமாறு அறிவுறுத்தியும் அவ்வறிவுரையை ஏற்காததால் கழுகுகளாய் உருமாறிப் பின் வேதகிரி வந்து வழிபட்டு பழைய உருவமும் மீளப்பெற்று உய்ந்துள்ளனர்.

இக்கலியுகத்தில் பூடா, விருத்தா எனும் இரு முனிவர்கள் சிவசாரூபம் வேண்டித் தவம் செய்தனர், சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி வழங்கியபோது

சிவசாயுச்சியமே தாம் வேண்டும் வரம் எனப் பொய்யுரைக்க அதனால் காசிப முனிவரிடத்தில் சம்பு-ஆதி எனும் கழுகுகளாய்ப் பிறந்து இக்கலியுகம் முழுவதும் வேதகிரிக்கு வந்து வழிபட்டு உய்வடையும் பேற்றினைப் பெற்றனர்.

இவ்வாறு யுகங்கள் தோறும் கழுகுகள் வந்து வழிபடும் சிறப்பினைப் பெற்ற காரணத்தினாலேயே கழுக்குன்றம், கங்காசலம் எனும் பெயர் வேதகிரிக்கு வழங்கிவருகின்றது என்பது நாம் அறிந்து மகிழத்தக்கது.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே''

என்ற தாயுமான சுவாமிகளின் அருள் வாக்கிற்கு இணங்க மூர்த்திச் சிறப்பினாலும், தலச் சிறப்பினாலும், தீர்த்தச் சிறப்பினாலும் பண்டுதொட்டு இன்று வரை மகிமை பெற்று விளங்கிவருவது திருக்கழுக்குன்றத் திருத்தலத்தின் சிறப்பாகும்.

வேதமே மலையாகி அதன் உச்சியில் சுயம்புவாய்ச் சுடர்க் கொழுந்தாய் இறைவன் திகழ்வது மூர்த்திச்சிறப்பாகும். வேதகிரியே சிவலிங்கம் போல் தோன்றுகின்றது. இறைவர் மலைக்கொழுந்தீசர் என வழங்கப்பெறுகின்றார்.

மலைக்கோயில் அம்பிகை சொக்கநாயகி. மலையடிவாரத்தில் உள்ள தாழக்கோயிலில் இறைவர் பக்தவச்சலேஸ்வரர் எனவும், இறைவி திரிபுரசுந்தரி எனவும் வழங்கப் பெறுகின்றனர். ''பெண்ணின் நல்லாள்'' எனவும் அழைக்கப் பெறும் திரிபுரசுந்தரியின் மூர்த்தம் அட்டகந்தங்களால் ஆன படியால் ஆடிப்பூரம், பங்குனி உத்திரம், நவராத்திரியில் வரும் நவமி ஆகிய மூன்றுநாள்களில் மட்டுமே இங்கு அம்பாளுக்கு முழு அபிஷேகம் நடைபெறுகின்றது. மற்ற நாட்களில் அம்பாளின் திருவடிகளுக்கு மட்டுமே அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**''கழுகு தொழு வேதகிரி சிகரி''** என்று அருணகிரிநாதர் பாடிச் சிறப்பித்திருப்பதைப் போல கழுகுகள் நாளும் வந்து வேதகிரீசுவரரை வழிபட்டு உணவு அருந்திச் செல்லும் தலச்சிறப்பு, இத்திருக்கழுக்குன்றம் திருத்தலத்திற்கே உரிய ஒன்றாகும்.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஹாவட் என்னும் டச்சு அறிஞர் தாம் எழுதியுள்ள நூலில் திருக்கழுக்குன்றத்திற்குக் கழுகுகள் தினமும் வந்து உணவு அருந்துவதையும், தாமும் அக்காட்சியை நேரில் கண்டு வியப்புற்றதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூற்றாண்டிலும் அண்மைக் காலம் வரை நடைபெற்று வந்த இவ்வதிசயத்தைப் பல்லாயிரக் கணக்கான மெய்யன்பர்களும், வெளிநாட்டுப் பயணிகளும் கண்டு மகிழ்ந்துள்ளனர்.

வேதகிரியில் பலப்பல மூலிகைகள் இருப்பதாலும், சஞ்சீவிக்காற்று வீசுவதாலும் இம்மலையை வலம் வருபவர்கள் உடல்நோயும், உளநோயும் நீங்கி நலமுடன் நீடித்த ஆயுள் பெற்று வாழ்ந்து வருவது இன்றும் இத்தல விசேடமாகத் திகழ்ந்து வருகின்றது.

மலைப்பாங்கான தலங்களில் வாழை செழித்து வளர்வது கண்கூடு. திருக்கழுக்குன்றத்திலும் வாழை மரங்கள் மிகுதி. இத்தலத்தின் தலமரமும் வாழை என்பது குறிப்பிடத்தக்கது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இத்திருத்தலத்தில் சங்குதீர்த்த புட்கரமேளாவும், இலட்ச தீபப் பெருவிழாவும் கொண்டாடப்பட்டு வருவது மிகச் சிறப்பான விசேடமாகும்.

எண்ணற்ற தீர்த்தங்களால் சிறப்புற்று விளங்கும் திருக்கழுக்குன்றத்தில் முக்கிய தீர்த்தங்களாகப் பன்னிரு தீர்த்தங்கள் விளங்குகின்றன. அவை பின்வருமாறு:

## தமிழகத்தின் பெருமை

உலகத்தில் இருக்கிற கோயில்களில் பாதிக்குமேல் இந்தியாவில்தான் இருக்கின்றன. இதிலும் பாதிக்கு மேற்பட்ட ஆலயங்கள் தமிழ் நாட்டில் தான் இருக்கின்றன.

உலகத்தில் இருக்கின்ற சாஸ்திரங்களில், பக்தி நூல்களில் பாதிக்குமேல் இந்தியாவில் தான் இருக்கின்றன. இதிலும் பாதிக்கு மேற்பட்ட நூல்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவையே.

- ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகளின் ''தெய்வத்தின் குரல்'' நூலிலிருந்து

## பக்தன் எப்படி இருக்க வேண்டும்?

உலகத்தில் ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்ற குறிக்கோள் பக்தனுக்கு வேண்டும். பக்தன் சாதாரண நடப்புகளை நம்பி இருக்கக் கூடாது. செயலின் பலனுக்காகவே முயற்சி செய்யக் கூடாது. தூய்மையானவனாகவும், திறமை உடையவனாகவும் இருக்க வேண்டும். சுப காரியங்களுக்கும், அசுபகாரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், தன் பக்திக் கடமையைச் செயலாற்றும் பக்தன் மிகச் சிறந்தவன் ஆவான்.

- பகவத்கீதை.

1. இந்திர தீர்த்தம்
2. சம்பு தீர்த்தம்
3. ருத்ர கோடி தீர்த்தம்
4. வசிட்ட தீர்த்தம்
5. மெய்ஞான தீர்த்தம்
6. அகத்திய தீர்த்தம்
7. மார்க்கண்டேய தீர்த்தம்
8. விசுவாமித்திர தீர்த்தம்
9. நந்தி தீர்த்தம்
10. வருண தீர்த்தம்
11. அகலிகை தீர்த்தம்
12. பட்சித் தீர்த்தம்

என்றும் பதினாறு வயது பெற்ற சிரஞ்சீவியான மார்க்கண்டேய மாமுனிவருக்காக - அவர் அபிஷேக ஆராதனை செய்யப் பயன்படுவதற்காக ஓங்கார நாதத்துடன் சங்கம் தோன்றிய காரணத்தால் மார் கண்டேய தீர்த்தமே சங்கு தீர்த்தம் என வழங்கப்பட்டு வருகின்றது. கடலில் சங்குகள் பிறப்பதுவே இயற்கை, திருக்கழுக்குன்றத்தில் தான் திருக்குளத்தில் சங்கு பிறக்கும் அதிசயம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை இன்றும் நடைபெற்று வருவதைக் காணு கின்றோம்.

சங்கு தீர்த்தத்தில் பிறந்த சங்குகளைக் கொண்டு கார்த்திகைத் திங்களின் கடைசி சோம வாரத்தில் வேதகிரிப் பெருமானுக்கு அபிடேகம் செய்து வருகிறார்கள்.


சங்கு தீர்த்தமும் சிவபெருமானும் வேறு வேறு இல்லை; இரண்டும் ஒன்றே எனத் தல புராணம் கூறுகின்றது.

''காணினும் கைதொடினும், அள்ளித்
தெளிப்பினும், உட்கொளினும்
கணப்பொழுது மூழ்கினும், போய்க்
கால்வழுக்கி வீழினும்
பாணிவிரி திரையின் ஒரு பனித்திவலை படினும்
படரும் காற்றணுகினும் மெய்ப்பாதகம்
குடி போம்
சேணுலகு தொழுமிந்த தடந்தோறும் நீர்முகந்து
செலும் அடியார் அயமேகத் திற நிகராம் விரதம்
பூணுமவர் படிந்தியற்றில் அனந்தமெனப் பலிக்கும்
புராரி என்றும் தீர்த்தம் என்றும்
இரண்டில்லை இப்புரிக்கே''

என்று இத்தீர்த்த மகிமையைத் தலபுராணம் விரித்துக் கூறக் காணுகின்றோம்.

சித்தபிரமை கொண்டவர்கள் சங்கு தீர்த்தம் முதலான தீர்த்தங்களில் நீராடிக் குணம் பெற்று வருவது இன்றும் நடைபெற்று வரும் அற்புதமாகும்.

உருத்திரகோடி எனும் மிகப் பழமை வாய்ந்த சிவத்தலமும் திருக்கழுக்குன்றத்தில் திகழ்ந்து வரு கின்றது. முனிவர், தேவர் முதலியவர்களுக்கு இடை யூறு செய்யும் அரக்கர்களை அழிப்பதற்காக சிவபெரு மான் தம் திருமேனியில் இருந்து கோடி உருத்திரர் களைத் தோற்றுவித்தார். அவர்கள் கபாலம், எலும்பு மாலை, புலித்தோல் ஆடை அணிந்தவர்களாய் முத் தலைச் சூலம் முதலிய ஆயுதங்களை ஏந்திக் கட லெனத் திரண்டு வந்த அரக்கர்களை அழித்தார்கள். அரக்கர்களைக் கொன்ற பாவம் தீர வேதகிரி வந்து வழிபட்ட உருத்திரர்களுக்கு இறைவன் தனித்தனியே காட்சி தந்தார். அன்னை அபிராமியுடன் உருத்திர கோடீஸ்வரர் அருள் பாலிக்கும் உருத்திரகோடி எனும் பழமையான தலமும் திருக்கழுக்குன்றத்தில் திகழ் வதால் இத்தலத்திற்கு உருத்திரகோடி எனும் பெய ரும்கூட வழங்கி வருகின்றது.



இந்திரன் தன் சாபம் நீக்கிய இறைவரை இடிஅபிசேகம் செய்து வழிபடுவதும் இத்தல விசேட மாகும்.

இந்திரன் சாபத்தைப் போக்கியதால் இந்திரபுரி எனவும், சிவபெருமான் வீற்றிருக்கப் பெறுதலின் சிவபுரம் எனவும், இங்கு செய்யப் பெறும் தருமம் ஒன்று, கோடியாகிப் பயன் அளிப்பதால் தரும கோடி எனவும், பன்னிரு சூரியர்களால் பூசிக்கப் பெற்றமை யின் தினகரபுரி, பரிதிபுரி எனவும், கயிலை மலையின் ஒரு சிகரம் ஆதலின் தென்கயிலை, தட்சிண கைலாசம் எனவும், நந்தி வழிபட்டமையின் நந்திபுரி எனவும், திருமால் நலம் பெற்றமையின் நாராயணபுரம் என வும், பிரமதேவன் சாபவிமோசனம் பெற்றமையின் பிரமபுரி எனவும், வசுக்கள் குறை நீக்கியமையால் வசுபுரி எனவும், வாழை மரத்தைத் தலமரமாகக் கொண்டமையின் கதலிவனம் எனவும் இத்திருத் தலத்திற்கே வழங்கிவரும் பெயர்கள் எண்ணிறந்தன வாகும்.

வடமொழியில் இத்தலம் ''பட்சிதீர்த்தம்'' என வழங்கப்பட்டு வருகின்றது.

காசி கங்கைத்தீர்த்தம் நதியில் அமைந்து விளங்கும் புண்ணிய தீர்த்தம்.

இராமேஸ்வரம் கோடித் தீர்த்தம் கடலில் அமைந்து விளங்கும் புண்ணிய தீர்த்தம்.

திருக்கழுக்குன்றம் ''பட்சிதீர்த்தம்'' திருக் குளத்தில் அமைந்து விளங்கும் புண்ணிய தீர்த்தம். நதியில், கடலில் அமைந்து விளங்கும் புண்ணிய தீர்த்தங்களுக்கு ஒப்பாகப் ''பட்சி தீர்த்தம்'' எனும் திருக்குளத்தீர்த்தமும் அமைந்து விளங்கும் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் மகிமை பெற்று விளங்கும் திருக்கழுக்குன்றம் தாழக் கோயிலின் திருக்குட நீராட்டு விழா 5.7.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

''வேதகிரிப் பவரோக வயித்திய
வேணி முடிக்கனியே''

என்று பிறவியாகிய நோய்க்கு மருத்துவன் திருக் கழுக்குன்றத்து இறைவனே எனப் பாடியிருத்தலால் அன்னை திரிபுரசுந்தரி உடனுறை அருள்மிகு பக்த வச்சலப் பெருமான் திருவடிகளைப் போற்றிக் ''காதற்செய் கோயில் கழுக்குன்றே'' எனத் திருஞான சம்பந்தர் அறிவுறுத்தியுள்ளவாறு நாமும் திருக்கழுக் குன்றத்தினை வழிபட்டுப் பயன்பெறுவோமாக!

# "விபீஷணர் சோதரி"

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

இறைவனை ஞானமே வடிவினன் என்று மறைகள் பேசுகின்றன. அத்தகைய ஞானம் நான்கு வகைப்படும் என ஆன்றோர்கள் கூறுவர். சிவஞானம், அனுபவஞானம், கலைஞானம், மெய்ஞானம் எனப் படும். இந்நான்கினுள் அனுபவ ஞானமே சிறந்தது. ஏனைய மூன்றும் இதற்குச் சார்புடையவனவாகும். அத்தகு அனுபவ ஞானமே பிறப்பறுக்கும் தன்மையது என்ற கருத்தைச் சேக்கிழார் ''பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்'' எனக் குறிப்பிட் டுள்ளார். இதன் அடிப்படையிலே விளங்குவதே அருணகிரிநாதரின் திருப்புகழாகிய கவிகள். மத மொழி பகரினும், ஏழைக்கிரங்கும் பெருமாள், இத மொழி பகரும் அருணகிரியாருக்கு அருள்புரிந்த தில் வியப்பென்ன இருக்கப்போகிறது?

அருணகிரியார் திருப்புகழ்ப்பாடல்களில் பெரும்பகுதியில் திருமால் மருகன் எனப் புகழ்ந்து பாடுவதில் மிகவும் விருப்பமுடையவர் என்பது இவரது பாடல்களில் காணலாம். நாராயணன் சம்பந்த மான இராமாயணம், மகாபாரதக் குறிப்புகள் பல வற்றைத் திருப்புகழில் காணலாம். இராமாயண நிகழ்ச்சிகளை விவரிக்கும் தருணத்தில், அதில் பங் கேற்கும் பாத்திரங்களைப் பற்றி பாடிய பாடல் ஒன்றைப் பார்ப்போம்:-

''இரவி யிந்தரன் வெற்றிக் குரங்கி
நரச ரென்றும் ஒப்பற்ற வுந்தி
இறைவன் எண்கினக் கர்த்தனென்றும் - நெடுநீலன்
எரிய தென்றும் ருத்ரற் சிறந்த
அநும னென்றும் ஒப்பற்ற அண்டர்
எவரும் இந்தவர்க் கத்தில் வந்து - புனமேவ''

- என்பதாக ''கருவடைந்து பத்து'' எனத் தொடங்கும் பாடலில் பாடியுள்ளார்.

இதன் கருத்து :- ''சூரியன் கூறான சுக்ரீவன், இந்திரன் கூறான வாலி இவர்கள் இருவரும் வெற்றிக் குரங்கரசர்களாகவும், ஒப்பில்லாத திருமால் உந்தியில் பிறந்த பிரமன் சாம்புவானாகவும், நெடிய நீலன் எரியின் கூறென்றும், ருத்திரன் கூறு அனுமன் என்றும் ஒப்பிலாத தேவர்கள் யாவரும் இந்த வகையாக பூமியில் வந்துசேர'' என்பதாகும்.

இவ்வாறாக அருணகிரியார் பரக்கப் பாடி யிருந்த போதிலும், இராமாயணத்தில் ஒரு குறிப் பிட்ட பாத்திரத்தின் அறிமுகம், வழக்கமாக அனை வரும் அறிந்ததற்குமாறாக, சூர்ப்பணகையைப் பற்றி கூறப்பட்டிருப்பது மிகுந்த சுவை தருவதோடன்றி, இவரது புலமையின் சாதுரியமும் மெச்சத் தகுவ தாகும். இப்பாடல் ஒன்றே ''வாக்கிற்கு அருணகிரி'' என்னும் தலைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அருணகிரியாரின் படைப்பில் சூர்ப்பணகையைப் பற்றிய குறிப்பு, இதுகாறும் இராமாயணத்தில் கூறப் படாதவகையில் வர்ணித்துள்ளது, நம்மை ஆழமாக சிந்திக்கவைக்கும் இடமாகும். இனி இதன் சம்பந்த மான ''தாக்கமருக்கொரு சாரையை'' எனத் தொடங் கும் திருத்தணித் திருப்புகழைப்பார்ப்போம்.

''மூக்கரை மட்டை மகாபல காரணி
சூர்ப்ப ணகைப்படு மூளியு தாசினி
மூர்க்க குலத்தி விபீஷணர் சோதரி, - முழுமோடி''

பொதுவாக சூர்ப்பணகையைப் பற்றி குறிப்பிடும் எல்லா கவிஞர்களும், சூர்ப்பணகையை இராவணன் தங்கை என்றே குறிப்பிட்ட போதிலும், அதற்கு மாறாக அருணகிரியார் மட்டுமே மேலே கூறப்பட்ட பாடலில் 5-வது அடியில் ''விபீஷணர் சோதரி'' என்று கூறுகிறார். ஏனையோர்கள் கூறுவது போல், இரா வணன் சோதரி என்று குறிப்பிட்டிருந்தால் அதில் அத்தகைய சிறப்பு இருந்திருக்காது. பொது வழக்கில் கூறவேண்டுமானால், இரண்டு கருத்துக்களையும் ''ஒரே குட்டையில் ஊறிய மட்டை'' என்றே கொள்ள வேண்டிவரும். ஆனால் ''விபீஷணர் சோதரி'' எனக் குறிப்பிடுவதால், சூர்ப்பணகைப் பாத்திரம் தனித் தன்மை பெற்றுவிடுகிறதல்லவா.

சூர்ப்பணகையை பலவகை பெயர்களால் குறிப்பிட்ட போதிலும், ''விபீஷணர் சோதரி'' என்ற சொல்மட்டுமே சூர்ப்பணகையை பெருமைப்படுத்து வதாக உள்ளது. ஏனையபிற சொற்கள் அனைத்தும் எல்லோராலும், சூர்ப்பணகையைப்பற்றிக் கொண் டுள்ள பண்பை உறுதிப் படுத்துவனவாகவே உள்ளன. இது போன்று சூர்ப்பணகையின் இயல்பான பண் பைக் குறிப்பதாகவே பல பெயர்களால் கூறி, முற் றிலும் மாறாக ''விபீஷணர் சோதரி'' என அருண கிரியார் குறிப்பிடுவது ஏன்? எனும் வினா அனை வருக்கும் மனதில் எழுவது இயல்பே.

அருணகிரியார் ''விபீஷணர் சோதரி'' என்ற ஒரு சொல்லால் மட்டும் சிறப்பிப்பதில் நமக்கு கேள்விக்குறியாக அமையக் காரணம், சூர்ப்பணகையிடம் எந்த ஒரு நற்பண்பும் இல்லை என்பதை ராமாயணம் படித்தவர்கள், கேட்டவர்கள் யாவரும் அறிவர். மேலும் விவரிக்கப் புகுந்தால், இராவணனைக் கொல்ல அவனோடு உடன்பிறந்த நோய் சூர்ப்பணகை என்றே கம்பர் குறிப்பிடுகிறார்.

ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நோயினாலோ, ஆபத்துகளினாலோ சாகின்றனர். அதனால் நோயை, உடன்பிறந்தே கொல்வது என்று கூறும் முதுமொழி உலக வழக்கத்தில் உள்ளது. இராவணனை படைத்த பிரம்மன் அவன் உடம்பில் நோயை வைக்க முடியவில்லை. காரணம் இராவணன் செய்த தவத்தால் ஒவ்வொரு உடல் உறுப்பும் தவத்தின் பலனைப் பெற்றிருந்தது. அவன் மார்பு வாரணம் பொருதமார்பு. அவன் தோளோ மலையினை அசைத்த தோள். அவனது நாக்கோ நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நாவாகும். அவன் இடுப்போ சங்கரன் கொடுத்த வாள் அணிந்திருக்கும் இடுப்பு. அதனால் அவனது உடம்பில் நோயை வைக்க முடியவில்லை. உடன் பிறந்தே கொல்லும் நோயை உடம்போடு பிறக்க வைக்க முடியவில்லை என்பதால் பிரம்மன் அந்த நோயை மட்டும் சூர்ப்பணகையாக உருவாக்கி, இராவணனுடன் பிடிக்க வைத்து விட்டான் என கம்பர் நயமாக கூறிய பாடலைப் பார்ப்போம்.

''நீலமா மணிநிற நிருத வேந்தனை
மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினால்
வேலை நாள் உயிரொடும் பிறந்து, தான்விளை
காலம் ஓர்ந்து உடன்உறை கடியநோய் ஆனாள்''

அத்தகைய சூர்ப்பணகையை ''விபீஷணர் சோதரி'' என அருணகிரியார் கூறக்காரணம் தமிழகத்தில் சூர்ப்பணகையைப் பற்றி வழக்கத்தில் இருக்கும் ஒரு வரலாறே ஆகும்.

சுங்கமந்திரன் என்ற அரசனுக்கு, குணசிலன் எனும்மகன் இருந்தான். நல்லொழுக்கத்தோடு வாழும் தன்மையுடையவன். அரசன் தனது மகனை அவைக்கள குருவாகிய ஆனந்தகுரு எனும் முனிவரிடம் சகல கலைகளையும், சாஸ்திரங்களையும் கற்க, அவரது இல்லத்திற்கு அனுப்பிவைத்தான். குருவிற்கு, சுமதி எனும் ஒரு மகள் இருந்தாள். குணசிலன் தினம் குருவின் இருப்பிடம் சென்று கல்வி கற்பது வழக்கம். குருவின் மகள் சுமதி அரச குமாரனைக் காதலித்து அதை வெளியிடக் காலம் எதிர்பார்த்திருந்தாள். ஒரு நாள் குணசிலன் குருவின் இல்லம் சென்று சில சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள சென்ற சமயம் குருவானவர் ஆசிரமத்தில் இல்லை. சுமதி இதுவே தக்க தருணம் என எண்ணி, குணசிலனிடம் தன் காதலை தெரிவித்தாள். குணசிலன் குருவின் மகள் சுமதியை தன் தங்கையாக பாவித்தலே சிறந்ததெனக் கூறி, அவளது எண்ணத்தை மறுத்துவிட்டு திரும்பி விட்டான். தந்தை ஆனந்தகுரு வந்ததும், சுமதி நிகழ்ந்ததை மாற்றிவிட எண்ணி, தனித்திருக்கும் போது அரச குமாரன் தீங்கிழைக்கமுற்பட்டான் என முறையிட்டாள். ஆனந்த குரு உடனே இந்தச் செய்தியை அரசனிடம் முறையிட்டார். மன்னன், சிறிதும் ஆராயாது குருவின் மகளைச் சகோதரியாக பாவிப்பதை விட்டுவிட்டு அவளை விரும்பினது குற்றம் என கருதி ஏவலாளர்களிடம், அவன் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் வெட்டப்பட வேண்டும் என உத்திரவிட்டார்.

அதன் படி குணசிலனை நிலத்தில் கிடத்திக் கை, கால், மூக்கு என ஒவ்வொரு உறுப்பாக வெட்டினர். குணசிலன் துடிதுடித்து, பூமியில் கிடந்தபடியே ''ஆதிசேடனே, நீதான் இந்தப் பூமியைத் தாங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன. மக்கள் தங்கள் குறைகளை நீக்க மன்னனிடம் முறையிடுவது வழக்கம். மாறாக மன்னனே நீதியறியாது தவறு செய்தால் யாரிடம் முறையிடுவது? ஆதிசேடனே! என் உண்மையான உள்ளத்தை நீயும் அறியாயோ?'' என புலம்பினான். அவன் இறக்கும் தருவாயில் அவனிடம் இரகசியமாக ஆதிசேடன், ''குணசிலனே! உன் உண்மையான உள்ளத்தை நான் அறிவேன். குருவின் மகளை தங்கையாகவே நீ பாவித்தாய். சுமதியே பெருங்குற்றம் செய்தாள். இதற்குத் தண்டனையாக அடுத்த பிறப்பில் நீ விபீஷணனாகவும் உனக்கே இவள் தங்கையாகவும் பிறப்பாள். நானே இலக்குவனாக அவதரித்து, நீ இப்போது உன்புலன்களை இழந்தது போல் அவள் புலன்களை அறுபேன் என்றான். அதனால் மறுபிறப்பில் குணசிலன் விபீஷணனாகவும் சுமதி சூர்ப்பணகையாகவும் பிறந்தனர். ஆதிசேடன் இலக்குவனாக பிறந்து, சூர்ப்பணகையின் மூக்கு முதலிய உறுப்புகளை அறுத்தான். தமிழகத்தில் வழங்கும் இக்கதையை அருணகிரியார் முன்னரே அறிந்திருந்ததால் சூர்ப்பணகையை குறிக்கவந்தவர் ''விபீஷணர் சோதரி'' என்று குறிப்பிட்டார். இதனால் வினைப்பயனை விளக்கும் ஒரு குறிப்பை சூர்ப்பணகைப் பாத்திரத்தில் பொருத்திக்காட்டியவர் அருணகிரியார் ஒருவரே என உறுதியோடு அறுதியிட்டு கூறலாம். ''விபீஷணர் சோதரி'' எனக் குறிப்பிடும் அருணகிரியாரின் இக்குறிப்பு, இராமாயண ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு முக்கிய குறிப்பாகும்.

★★★

# பிரதோஷ மகிமையும் தத்துவமும்

- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

**(இறைவன் உணர்த்த அனுபவமான பிரதோஷ தத்துவம்)**

**பிரதோஷம் என்பது ஐந்து வகைப்படும்**

*1.* நித்ய பிரதோஷம் *(2)* பட்க்ஷ பிரதோஷம், *(3)* மாதபிரதோஷம், *(4)* மகா பிரதோஷம், *(5)* உத்தம மகா பிரதோஷம் என்று பிரதோஷம் ஐந்து வகைப் படும்.

1. நித்தியம் மாலை சூரிய அஸ்தமனத்துக்கு முன் னும் பின்னும் மூன்றே முக்கால் நாழிகை வரை ஏழரை நாழிகை நித்ய பிரதோஷம்.
2. சுக்ல பட்க்ஷ திரயோதசியில் வருவது பட்க்ஷ பிரதோஷம்.
3. வளர்பிறை தேய்பிறை திரயோதசியில் வருவது மாதபிரதோஷம்.
4. சனிக்கிழமையில் வருவது மகாபிரதோஷம்.
5. வளர்பிறை திரயோதசியுடன் கூடிய சனிக்கிழமை யில் வருவது உத்தம மகா பிரதோஷம் ஆகும்.

**மகா பிரதோஷம் மூன்று வகைப்படும்**

1) உத்தம மகா பிரதோஷம்
2) மத்யம மகாபிரதோஷம்
3) மகா பிரதோஷம்.

பிரதோஷம் என்பது சிவனும் சக்தியும் சேர்ந்து இணையும் ஆனந்தக் காலம். அதாவது சிவசக்தியின் இரண்டு கண்களான சூரியனும் சந்திரனும் சேரும் நேரம் ஆகும். தோஷத்துக்கு ஒரு தோஷம் கொண்டு வரும் நேரம், பிரதோஷம். விதிக்கும் ஒரு விதி கொண்டுவரும் நேரம் பிரதோஷம் ஆகும்.

**ராகம்:- ஆரபி** **தாளம்:- ஆதி**

**பல்லவி**

பிரதோஷ நாயகன் பிரதோஷ நன்னாளில்
துன்பம் துடைத்திடுவான்

**அனுபல்லவி**

பிரதோஷ நாயகனே நந்தியாம் - மறு
பிறவியை நீக்கிடும் பரிபூர்ணசிவமாம் //பிரதோஷ//

***சரணம் - 1***

நந்தி தரிசனம் காணும் முன்பு
மருளாம் சமாதி நிலை உண்டாம் - திரு
நந்தி தரிசனம் கண்டபின்னே
தெருளாம் தெளிந்த நிலை உண்டாம்
//பிரதோஷ//

***சரணம் - 2***

சர்வ தோஷத்தையும் பாபத்தையும்
விலகி ஓடிடச் செய்திடுவான்
கூற்றுவனை அஞ்சி ஓடிடச் செய்திடுவான்
கூடவே அன்பரை அணைத்திடுவான்
//பிரதோஷ//

***சரணம் - 3***

ஞான ஒளியினைத் தந்திடுவான் - சிவ
ஞான ஜோதியாய் வந்திடுவான் - பரஞ்
ஜோதியாய் அடியாரை அணைத்திடுவான்
ஜோதியுள் ஜோதியாய் சேர்த்திடுவான்
//பிரதோஷ//

***சரணம் - 4***

பேரொளி மண்டலமே நந்தியாம் - திரு
நந்தியே ரிஷப வாகனமாம்
சிவனும் சக்தியுமாய் சேர்ந்திடும் ஒளியே
சிவஞான ஜோதியாம் அருட்பெருஞ் ஜோதியாம்
//பிரதோஷ//

***சரணம் - 5***

சூரிய சந்திரனாம் தன் இரு கண்ணால்
ஞானக் கண்ணைக் கண்டிடணும்
ஞானக் கண்ணில் ஜோதியாகி அம்பலவீதியினில்
பரிபூர்ண ஜோதியுடன் மகிழ்ந்தாடணும்
//பிரதோஷ//

***சரணம் - 6***

உலகத் தத்துவங்கள் உடலினிலே
பிரதோஷ தத்துவமும் நம் உடலினிலே
புருவ மத்தியினில் சேயினை அணைத்தாடும்
ஆனந்தத் தாண்டவம் உடல் உச்சியிலே
//பிரதோஷ//



**சரணம் - 7.**

பிறவிப் பிணியாம் ஆலகால விஷத்தை
பிரதோஷ காலத்தினில் உண்டிடுவான்
தென்னாடுடைய சிவனாய் சேயின் சிரசினைத் தாங்கி
தரணியில் மகிழ்ந்து வலம் வருவான்
//பிரதோஷ//

★★★

மகா பிரதோஷம் மிகச் சிறந்த பிரதோஷம், சனிவாரமாம், ஸ்திரவாரத்தில், ஸ்திரமாக சேயினை அணைத்தாடும் பிரதோஷம் மிகச் சிறந்த பிரதோஷம். சிவனும் சக்தியும் ஸ்திரமாக கூடிடும் நேரம், சூரிய சந்திரனாம் நம் இருகண் சேர்ந்திடும் நேரம், சனிக் கிழமையில் ஸ்திரமாக, ஆனந்தத் தாண்டவம் ஆடும் நேரம். மகாபிரதோஷமாம் அதுவும் வளர்பிறை திரயோதசியுடன் கூடிய சனிக்கிழமையில் வருவது உத்தம மகா பிரதோஷம்.

கண்ணின் ஜோதியாக கத்தன் வந்து, பக்கக் கண்மணியார்கித் துணைவந்து, விண் ஜோதியில் சேர்த்த நேரம், இருகண் சேர்ந்து பார்த்து, ஞானக் கண் திறந்த நேரம், பிரதோஷ நேரம், விண்ணும் மண்ணும் சேர்ந்து மகிழ்ந்து தன் சேயினை அணைத்து ஆனந்த மாக சேயின் சிரசினில் ஆடிடும் நேரம், சூரிய சந்திர னாம் நம் இருகண்கள் சேர்ந்து பார்த்த ஞானக் கண் வரும் நேரம், பிரதோஷ நேரம். ஆத்மன் சிவஞான ஜோதியான நேரம் பிரதோஷ நேரம். சத்தும் சித்தும் சேர்ந்த ஆனந்தம் சத்சித்தானந்தமாமே: சிவஞான ஜோதியாமே. சிவஞான ஜோதியினால் பரஞ்ஜோதி யைச் சேர்ந்த ஆனந்தத் தாண்டவமே. இது பிரதோஷ நேரமே. இந்தப் பேரின்பம் மனிதப்பிறவியில்தான் அனுபவிக்க முடியும். ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் நிச்சயம் அனுபவிப்பான். ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாய்த் தாய் தந்தையுடன் கலப்பது பிரதோஷ காலமாகும்.

**ராகம்:- அடாணா** **தாளம் :- ஆதி**

**பல்லவி**

பிரதோஷ காலத்தில் இறைவனை வணங்கு
பாபங்கள் நீங்கும் புண்ணியம் சேரும் //பிர//

**அனுபல்லவி**

நினைத்தவை நடக்கும் எண்ணங்கள் செயலாகும்
சர்வ தோஷங்களும் விலகி விடும் //பிர//

**சரணம் - 1**

பகலின் முடிவாம் இரவின் ஆரம்பத்தில்
இரவின் முடிவாம் பகலின் ஆரம்பத்தில்
கனிவுடன் அன்புடன் தர்மசிந்தனையுடன்
இரண்டு வேளையும் இறைவனை வணங்கு! //பிர//

**சரணம் - 2**

சாகா வாழ்வு பெற சத்தியம் ஆகிட
பிறவிப் பிணியாம் பெரும்பிணி நீங்கிட
சனிவாரத்தில் பிரதோஷ காலத்தில்
இரண்டு வேளையும் இறைவனை வணங்கு
பிரதோஷ காலத்தில் இறைவனை வணங்கு //பிர//

★★★

பிரதோஷ காலத்தில் நெற்றி கண்ணைத் திறந் திடு. வெற்றி மாலை சூடிடு, வெற்றி என்றால் அது மதியின் வெற்றி, தோல்வி என்றால் அது விதியின் சக்தி. விதி விதி என்று நம்பிடும் அன்பரும் விதிக்கு ஒரு விதி கொண்டு வரும் நேரம் பிரதோஷ நேரம், கண்ணுக்கும் தெரியாமல், கணக்கும் பாராமல் கண் ஒளியானவன் கந்தன். கண்ணுக்குள்ளே உன் கண்ணின் ஒளியாய்க் கந்தனைக் கொண்டிடு, பிரதோஷக் காலத்தினில், கண்ணில் கண்மணியாய்க் கந்தன் துணையிருக்க சதா நேரமும் கந்தனின் உபதேச மந்திரமாம், ''ஓம் நமசிவாய சிவாய நம ஓம்'' என்பதை நாள் முழுக்க மோனமாக உதட்டை கூட அசைக்காமல் மானசீக மாகச் சொல்லி, அதனால் புரட்டாசியில் அபயகரம் காட்டி அன்புடன் காட்சி தரும் சிவ பெருமானை புருவ நடுவினில் ஆத்ம ஜோதியினில் காணும் அற்புதமான இனிய நேரம், இரவின் முடிவாம் பகலின்ஆரம்ப மாம் சனிக்கிழமை யாம் ஸ்திரவார பிரதோஷத்தில் தான்.

வான் ஜோதியாம் தந்தை பூமி நோக்கி இறங்கி வர, கண்ணின் ஜோதியாம் கந்தன் விண்ணின் ஜோதியுள் ஆத்மனை சேர்ந்து மகிழ்ந்து, விண்ணும் மண்ணும் சேர்த்து சேயினை அணைத்து ஆனந்தத் தாண்டவம் ஆடும் நேரம். இரவின் முடிவாம் பகலின் ஆரம்பத்தில் சனிக்கிழமையாம் ஸ்திரவாரத்தில்,ஸ்திரமாக கிடைத்திடும் பேரின்பம் இதுவும் பிரதோஷக் காலமே. பகலின் முடிவாம் இரவின் ஆரம்பமாம் பிரதோஷத்தினில் இதயத்தினில் ஜீவசிவ ஐக்கியமாமே. பரஞ்ஜோதி ஆத்ம ஜோதியைத் தூக்கிக் கொண்டு ஆனந்தத் தாண்டவம் ஆட, கண்ணின் ஜோதி கந்தன் கண்ணில் துணையிருக்க, பிராணாயாமம் செய்து, நாக்கை முழுங்கி (மடித்து) உச்சித் துளையை நாவால் அடைத்து அடயோகபிராணாயாமம் செய்து, குண்டலினியை எழுப்பி, பரிசுத்த சிவமாக்கிய நேரம், ஒளியுடல் ஆக்கிய நேரம் இரவின் முடிவாம் பகலின் ஆரம்பமாம் பிரதோஷ காலத்தினில்தான்.

ஆத்மன் விண்ணுக்குள்ளே விண்ணொளியாய் விண்ணுடன் கலந்த நேரம். மண்ணுக்குள்ளே மண் உடலில் விண்ணின் மகிமை உணரும் நேரம். விண்ணுக்குள்ளே ஜோதியாகி ஆடி மண்ணின் மகிமை உணரும் நேரம் பிரதோஷ நேரமாகும்.

இதுவே திருவடிப் பேரின்பமாம், மரணம் இல்லாப் பேரின்ப பெருவாழ்வாகும். இது மனிதப் பிறவியினில் ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்திய மாகும். இது சத்தியம், இது நிச்சயம்

**ராகம்:- காம்போதி** **தாளம்:- ஆதி**

**அனுபல்லவி**

பரிபூர்ண ஜோதியாம் பரஞ்ஜோதி அணைத்துக்
கொண்டால் //இறப்//

**பல்லவி**

இறப்பில்லையே மறு பிறப்பில்லையே

**சரணம்**

தாய் போன்ற குணம் கொண்டால் தாயாகலாம்
இறைவனின் குணம் கொண்டால் இறை ஆகலாம்
சிவன் நிலைப் பெறுவது சாத்தியமே
ஒவ்வொரு மனிதனும் சிவன் நிலைப் பெறலாம்
சாயுஜ்யம் பெறுவது சாத்தியமே
ஒவ்வொரு மனிதனும் சாயுஜ்யம் பெறலாம்
அருள் ஒளி உடல் ஆவது சாத்தியமே
ஒவ்வொரு மனிதனும் ஒளியுடல் பெறலாம்
//இறப்//

★★★

ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாய் தாய் தந்தையுடன் இரண்டறப் பிரிவின்றி கலப்பது பிரதோஷ காலம். அதுவும் ஸ்திரவாரமான சனிக்கிழமையில் ஸ்திரமாக, நிலையாக, நிரந்தரமாக, நிலையான பேரின்ப அருட் பெருஞ் ஜோதியினுள் கலந்து ஆனந்தப் பேரின்பம் அனுபவிக்க வேண்டும். உடலைக் கொடுத்து இன்பத்துன்பம் அனுபவிக்க வைக்கிறார் இறைவன். உடலில் உயிர் உள்ள போதே இறைவனைக் கலந்த பேரின்ப ஆனந்தம் அனுபவிக்க வேண்டும். உடலில் இருந்தால்தானே உணர்வுகள். அதனால் உடலில் உள்ள போதே உடையவனைக் கலந்து ஆனந்தப் பேரின்பம் அனுபவிக்க வேண்டும். உருவைத் தாங்கி அருவ ஜோதி உடலில் பவனி வர வேண்டும். விண்ணின் மகிமையை மண்ணில்தான் காண வேண்டும். மண்ணின் மகிமையையும் விண்ணில்தான் காண வேண்டும்.

இறைவன் பிரதோஷ காலத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறார் என்றும் அதுவும் நந்தியின் இரு கொம்புக்கு நடுவினில் தாண்டவம் ஆடுகிறார் என்றும் எல்லோரும் கூறுகின்றனர். விண்ணின் ஜோதி அம்பலத்தில் நந்தியின் கொம்புக்கு நடுவில் ஆடுகின்றதா? ரிஷபவாகனத்தில் ஆகாயத்தில் பவனி வருகிறதா? என்கின்ற கேள்விக்கு அனுபவமாக இறைவன் உணர்த்த பதில் கூறுகிறேன்.

பசுவாகிய உயிர் பதியாகிய இறைவனை அடைய வேண்டுமென்று சொல்கிறோம். உயிர் பசு என்றால் பதியாராக இருக்கணும்? சொல்லுங்கள், பசுவுக்கு ஆண்பால் காளை, ரிஷபம் அதனால் உயிரை பசுவாக குறிப்பிடும் தத்துவத்தில் பதியாகிய இறைவனே நந்தியாம் - ரிஷபமாம் - சிவபெருமானாக இருக்கிறார் அல்லவா.

உலகப் பஞ்சபூதங்களாம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா இவை யாவும் பரஞ்ஜோதியாம் பரமன் திருமேனியாகும். இதிலிருந்து பிரிந்ததுதான் ஆத்மவித்து. பஞ்சபூதங்களும் சக்தியுமே, சிவனும் சக்தியும் என்கிறோம். ஒருவிதையின் மேல்தோல் உரித்துவிட்டால் அந்த விதை முளைக்காது. அதுபோல் ஆத்மாவைச் சூழ்ந்த பஞ்சபூத ஆசை என்னும் மேல் தோல் நீங்கி விட்டால் ஆத்மவித்து முளைக்காது. கூடவந்த பஞ்சபூதம் உலகமாகிய உடல் பஞ்ச பூதத்துடன் கலந்துவிடும். ஆத்மஜோதி கண்மணி கந்தனால் பரஞ்ஜோதியுள் கலந்துவிடும். ஜோதியுள் ஜோதியாய் தாய்தந்தை மகிழ்ந்தே சேயினை அணைத்தாடும். ஜோதித் தாண்டவத்தை கண்மணி கந்தன் துணையால் இருகண்ணும் சேர்ந்து

புருவ நடுவில்தான் பார்க்க முடியும். பசுவாம் உயிராம் ஆத்மா, பதியாகிய இறைவனாம் பஞ்ச பூதமும் (காயம் சித்தியாக) தன்னுடன் சேர அணைத்துக் கொண்டு தவம் யோகம் செய்து, சிரசைத் தாங்கிக் கொண்டு, உருவை அருவஜோதி தாங்கிக் கொண்டு ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றது. உயிர் பசு. கூட வந்த பஞ்சபூதம் பதியாகிய சிவநந்தியாகும். அதனால் இந்த நந்தியின் புருவமத்தியில் நமது உடலாம் சிவ நந்தியின் இரண்டு கொம்பு போன்ற புருவங்களின் மத்தியில் இறைவனின் ஆனந்தத் தாண்டவம் என் பதை அனுபவமாக ஆனந்தமாக ஆணித்தரமாக உங்க ளுக்கு போதிக்கவே இறைவன் உணர்த்த எழுது கிறேன். புருவ மத்தியே நந்தி மண்டலமாம் ஓர் ஒளி மண்டலமாகும். (பேரொளி மண்டலம்)

*ராகம் : ஆபேரி* *தாளம்:- ஆதி*

பல்லவி

புருவ மத்தியிலே அருவ ஜோதி ஒன்று
மகிழ்ந்தே ஆடுதம்மா மகிழ்ந்தே ஆடுதம்மா

**அனுபல்லவி**

மருவி சேயினை அணைத்தே ஆடுதம்மா
பிறவிப் பிணியினை நீக்கிட ஆடுதம்மா //புருவ//

**சரணம் - 1**

உருவம் இல்லாத உன்னத ஜோதியம்மா
அருவ சிவமான ஆதி ஜோதியம்மா
உலகறிய ஆடுதம்மா உச்சியினில் ஆடுதம்மா
உலகறிய ஆடுதம்மா உச்சியினில் ஆடுதம்மா
//புருவ//

**சரணம் - 2**

மாணிக்கப் பரஞ்ஜோதி மரகத அருட்ஜோதி
பாரறிந்த பரஞ்ஜோதி யாம் அறிந்த அருட்ஜோதி
தாயாக வந்ததம்மா தருணத்தில் வந்ததம்மா
தாயாக வந்ததம்மா தருணத்தில் வந்ததம்மா
//புருவ//

★★★

புருவ நடுவில் மேருவுக்கு குழந்தையாகி கந்தன் உதித்த பிறகு சிவகுரு துணையுடன் பிராணா யாமம் நாவினை அடக்கிச் செய்து பிங்கலை, இட கலை, வலதுமூக்கு, இடதுமூக்கு செய்து மூலாதாரம் வரை இறக்கி, இறக்கியதை புருவ நடுவில் ஏற்றி உச்சியில் ஜோதியுடன் சேர்த்து முட்டணும். இதுதான் மூலாதாரப் பாற்கடலை கடைவது ஆகும். இந்த சமயம் குண்டலி சக்தி நிலையான பாம்பாக - ஒளிப் பாம்பாக அகண்ட பிரும்மாண்ட ஜோதியுள் ஆடும். நிலையாகத் தங்கி விடும். காயம் சித்தியாகி பிறப்பு இறப்பு அற்ற அருட் ஜோதி சிவமாம் சிவசாயுஜ்யம் கிடைப்பது பிரதோஷகாலமே. அதுவும் உத்தம மகா பிரதோஷமாம் சனிபிரதோஷமே.

ஓம்! ஓம்! ஓம்! அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி.

★★★

## வினாவும் விடையும் - காணாபத்யம்

**(விநாயகர் தொடர்பானவை)**

- டாக்டர் பருத்தியூர் K. சந்தானராமன்

**வினா**

*1) 'கணபதீச்சரம்' என்ற பெயருள்ள சிவன் கோயில் எங் குள்ளது?*
*2) சிதம்பரம் தல விநாயகர் பெயர் என்ன?*
*3) கள்ள வாரணப் பிள்ளையார் எழுந்தருளியுள்ள இடம் எது?*
*4) ''வினை கடி கணபதி'' என்று புகழ்ந்தவர் யார்?*
*5) திருவாரூர் கமலாலயக் குளக்கரையில் உள்ள விநாயகர் பெயர் என்ன?*
*6) எந்த ஊரில் விநாயக சதுர்த்தி வீடுகளில் கொண்டாடப் படாமல் கோயிலில் மட்டும் கொண்டாடப்படுகிறது?*
*7) 'பொள்ளாப் பிள்ளையார்' என்றால் என்ன?*
*8) விநாயகர் வதம் செய்த அசுரனின் பெயர் என்ன?*
*9) விநாயகர் அகவலை இயற்றியவர் யார்?*
*10) விநாயகர் அருள் பெற்ற திருமுறை ஆசிரியர் யார்?*
*11) அவர் இயற்றிய நூலின் பெயர் என்ன?*
*12) சிவனுக்கும், சக்திக்கும் நடுவில் வீற்றிருக்கும் கணபதி வடிவத்தின் பெயர் என்ன?*
*13) அவ்வடிவம் (மூர்த்தம்) எங்குள்ளது?*
*14) அகத்தியர் வழியே கணபதி தமிழகத்துக்கு அளித்த அருட்கொடை என்ன?*
*15) 'சர்ப்ப வீநாயகர்' என்ற அதிசய மூர்த்தம் எங் குள்ளது?*
*16) தனது ஒற்றைக் கொம்பை (தந்தத்தை) ஒடித்து அதனால் விநாயகர் எழுதிய நூல் எது?*
*17) கணபதிக்கு முதலில் கொழுக்கட்டை நிவேதனம் செய்தவர் யார்?*
*18) ''சிவனே என்று கிட'' என்பது போல் கணபதி பீஜாட் சரத்தை (வித்தெழுத்தை) அன்றாடப் பேச்சு வழக்கில் எடுத்தாள்கிறோம். அது என்ன?*
*19) திருவலஞ்சுழி விநாயக மூர்த்தம் எதனால் ஆனது?*
*20) பாரதி பாடிய விநாயகர் பெயர் என்ன?*
*21) பிள்ளையார்பட்டி கணபதியைப் பாடியவர் யார்?*
*22) கணபதி வழிபாடு சிறப்பாக நடைபெறும் மாநிலம் எது?*
*23) விகடச் சக்கர விநாயகர் எங்குள்ளார்?*
*24) மயிலாப்பூரின் தல விநாயகர் யார்?*
*25) ஆறு ஆதாரங்களில் விநாயகரின் இடம் எது?*
*26) எந்த நாயனாருக்காக கணபதி குளம் வெட்டினார்*
*27) கன்னி மூல கணபதி எங்குள்ளார்?*
*28) ''வாதாபி கணபதிம் பஜே'' என்ற கிருதியை இயற்றியவர் யார்?*
*29) ஆழத்து விநாயகர் எங்கு வீற்றிருக்கிறார்?*
*30) விநாயகரின் மூன்று சக்திகள் யாவர்?*

★★★ *(விடை 32-ஆம் பக்கத்தில்)*

# கம்பரின் இராமாவதாரம்

- கம்பன் கவிநயமணி V. தியாகராஜன்

### 5. வில்லைக் கண்ட வீரன்

விசுவாமித்திரனின் தவவேள்வி தடையின்றி நிறைவேற உதவிய இராம லட்சுமணர்கள் மேலும் காட்டின்வழியாகச் செல்லும்போது, இராமபிரானது திருவடி பட்டவுடன், கல்லுருவாயிருந்த ஒரு அம்மை நல்லுருவங்கொண்டு நின்றாள். ''இந்த அம்மை யார்?'' என்று ராமபிரான் கேட்பதற்கு முன்னரே, விசுவாமித்திரர் ''வேண்டுமென்றே தவறிழைத்த'' இந்திரனுக்கு உடல் பூராவும் கண்ணாகுமாறு சபித்த வரான கௌதமரின் மனைவி. இவள் பெயர் அக லிகை'' என்றார். அகலிகையின் வரலாற்றை அறிய விரும்பிய இராமபிரானிடம் விசுவாமித்திரர் ''இந்தப் பெண்ணின் கண்ணான வேல் (**கூர்வேல்விழி** என அருணகிரிநாதர் குறிப்பர்). மன்மதனின் பாணம் (காமத்தை உண்டாக்கக் கூடியது) இரண்டும் தேவேந் திரனைத் துன்புறுத்திப் பிறன் மனைவியை நாட நிர்ப்பந்தம் செய்தன. இதைக் காட்டிலும் இறந்து விடலாமே எனக் கூட தேவேந்திரன் எண்ணினான். அமுதத்தை அருந்திய அவனுக்கு மரணம் என்பது வராது. எனவே உயிருடன் இருந்தால் இத்தகைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டே தீர வேண் டும் என்ற நிலையில் காமம் எனும் பாம்பு புத்தி யெனும் மதியை விழுங்க (**மையல் நாகம் மதியை விழுங்க** என்பர் திருவிளையாடற் புராணமுடையார்) அம்முனிவரின் உருக்கொண்டு இந்திரன் அகலிகை யைத் தீண்டி விட்டான். **தன் கணவனோ என எண்ணி அகலிகை ஏமாந்து விட்டாள்.** அப்போது அங்கு வந்த கௌதமர் நடந்ததை அறிந்து சீறி ''உன் உடல் பூராவும் கோரமான குறியுண்டாகட்டும்'' என இந்திரனைச் சபித்து ''மற்றொருவன் உன்னைத் தீண்டிய காலத்தில் கல் மாதிரிக் கிடந்த நீ கல்லாகி விடு'' என்று அக லிகையையும் சபித்தார். ''அறியாமல் செய்த பிழையை மன்னித்தருள வேண்டும்'' என அகலிகை வேண்ட, ''தயரதன் மகனான இராமபிரான் இவ்வழியில் வரும்போது அவர் திருவடிகளின் தூசு பட்டு நீ உன் பழைய உருவு அடைவாய்'' என்றார். ''இராம! அவ் வாறே உன் திருவடித்தூள்பட்டு முன்னையுருவம் பெற்ற அம்மையே இவ்வகலிகை'' என்று வரலாறு கூறி முடித்தார் விசுவாமித்திரர். அகலிகையை அவள் கணவரான கௌதமரிடம் சேர்ப்பித்து, விசுவாமித் திரர் இராமலட்சுமணர் மேலும் பயணம் தொடங் கினர்.

அகலிகையை அறிமுகப்படுத்தும்போதே **தேவர்கோன் தனக்குச் செங்கண் ஆயிரமளித்தோன் பன்னி** (கற்புடைய பத்தினி) எனக் கூறியதுடன் **''நெஞ்சினால் பிழைப்பிலாதாள்''** என்றும் அவள் கற்பின் செல்வி எனவும் காட்டி விட்டார் கம்பர். அகலிகை, திரௌபதி, தாரை, சீதை, மண்டோதரி ஆகிய ஐவரும் கற்புக்கரசிகள் என வடமொழியில் ஒரு சுலோகம் உண்டு. ஆனால் ஐவரில் சீதை, மண்டோதரி என்ற இருவரும் சிறிது கூடக் குற்றம் அற்றவர் எனத் தமிழ் நாட்டவர் **அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை** என ஒரு பழமொழியை உண்டாக்கி விட்டனர்.

விசுவாமித்திரர் இராமலட்சுமணர் மூவரும் மிதிலாபுரியை அடைகின்றனர். மிதிலையில் கொடி கள் பறந்த அழகை ''நான் செய்த தவத்திற்கு இரக்கப்பட்டு **தாமரை மலரினின்றும் இறங்கி வந்த** சீதாபிராட்டியான திருமகள் என்னிடம் வளர்ந்து வரு கிறாள். **தாமரை போன்ற கண்களையுடைய இராமா!** அவளைத் திருமணம் புரிந்து கொள்ள வா, வா!'' என மிதிலையான பெண் தன் கைகளான கொடிகளை நீட்டி வரவேற்பளிப்பது மாதிரியிருந்தது என்கிறார் கவிஞர். அது மட்டுமா?

அழகுத் தெய்வமான மன்மதன் சீதாபிராட்டி யின் பேரழகைக் கண்டு வியந்து அவளது அழகைச் சித்திரத்தில் தீட்டிப்பார்க்க விரும்பினான். அதற்குத் தக்க வண்ணப் பொருள் கிடைக்காது, தேவருலகம் சென்று தேவர்கள் உண்டு மீதியிருந்த அமுதத்தைக் கண்டான். அது சீதாதேவியின் நிறத்தை ஒத்திருந்தது. சீதாபிராட்டியான திருமகளும் அமுதமும் பாற்கட லில் தோன்றியவை. கூடப்பிறந்தவர்களின் நிறம் ஒன் றாக இருப்பது இயல்புதானே. எனவே அமுதமான வண்ணத்தைக் கையில் எடுத்து அவளது அழகை எழுத முயற்சித்து, முடியாமல் திகைத்தான். அத்த கைய சீதாபிராட்டியான திருமகள் பிறந்த மிதிலை யின் மதிற்சுவர்கள் தாமரை மலர் போன்றிருந்தன. அத்தகைய நகருக்குள் இராமலட்சுமணர் விசுவா மித்திரருடன் நுழைந்தனர்.

ஆதரித்து: அமுதில் கோல் தோய்த்து:
அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்குமல்லால் மதனற்கும்
எழுதவொண்ணாச்

சீதையைத் தருதலாலே திருமகள் இருந்த
செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதில்
மிதிலை புக்கார்

தாமரையை விட்டு மிதிலை அடைந்த அம்மையைத் தாமரைக் கண்ணனான இராமபிரான் காண வந்து விட்டார். மிதிலாபுரியின் மதில்களும் சீதா பிராட்டி வசிக்க வந்ததால் தாமரை போலாயிற்று. இருவரும் **தாம் + அரைக்கணமும்** பிரியாதவர் எனக் காட்டிக் கொண்டனர் போலும்!

மிதிலையின் மேன் மாடத்தில் சீதாபிராட்டி நிற்கிறாள். பொன்னின் ஒளி **(கண்ணுக்கு இன்பம்)** மலரின் மணம் **(மூக்கிற்கு இன்பம்)** தேனின் இனிமை **(நாவிற்கு இன்பம்)** இவற்றையெல்லாம் இன்பம் என அறிவிப்பதே மனம். அத்தகைய மனம் நற் கவிதைகளைக் கேட்டு **(காதிற்கு இன்பம்)** இவ் வளவு இன்பமும் அறிந்த உடல் **(மெய்)** இன்ப மடைகிறது. ஐம்புலன்களுக்கும் இன்பமளிக்கும் அழகியாகச் சீதாபிராட்டியைக் காட்டுகிறான் கவிஞன்.

தெய்வீக முனிவரான விசுவாமித்திரர் முன் னால் வருகிறார். அவருக்கு பொன்னின் ஒளி **(லட்சுமி விலாசம்)** திருமகள் வசிக்கும் இடத்தின் மங்கள கரமான அழகும், தாமரை மலரின் வாசமும் ஒருங் குவர, **திருமகளே இங்கு எழுந்தருளியுள்ள மாதிரித் தோன்றுகிறது** என எண்ணினார். அடுத்து வந்த இராம பிரான் அங்கு நின்ற அம்மையைக் கண்டு மன மகிழ்ச்சியடைந்தார். பக்கத்திலுள்ள குளத்தில் ஆண் பெண்களாகிய இரு அன்னங்கள் நீந்திக் கொண்டிருப் பது கண்டு இராமபிரானையும் சீதாபிராட்டியையும் கண்டு 'இவ்விருவரும் திருமணம் செய்து கொள்வார் கள் என அறிவிக்கும் நற்சகுனமோ? என மகிழ்ந்தார் என மூன்று வரிகளுக்கும் விசுவாமித்திரர் இராம இலக்குவர்களான மூவரின் உணர்ச்சியைக் காட்டக் கூடியவைகளாக உள்ளன என நயம் கூறியருளினார் என் ஆசிரியப்பிரானான திரு N.R. கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்கள்.

பொன்னின் சோதி: போதினில் நாற்றம்
பொலிவே போல்
தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற்
கவியின்பம்
கன்னிமாடத்து உம்பரின் மாடே கழிபேடோடு
அன்னம் ஆடும் முன் துறை கண்டு அயல் நின்றார்.

மேன்மாடத்தில் நின்று கொண்டிருந்த சீதாபிராட் டியை இராமபிரான் கண்டார். ஒரு பெண் ஆண் மகனை நிமிர்ந்து பார்க்கமாட்டாள் என்பது நம்மரபு: மேன் மாடத்தில் தலைகுனிந்து நின்று கொண்டிருந்த சீதாபிராட்டியின் கண்களில் இராமபிரான் பட்டார். **அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்** என்றார். பாற்கடலிலே பள்ளி கொண்டிருந்த இரு வரும், ஒருவர் அயோத்தியிலும் மற்றொருவர் மிதிலையிலும் பிறந்து சந்தித்தால் இதை வர்ணிக்க வேண்டுமோ? **கருங்கடல் பள்ளியில் கலவி நீங் கிப்போய்ப் பிரிந்தவர் கூடினால் பேசல் வேண் டுமோ?** என்கிறார். நவரத்தினங்களில் ஒன்றான நீலத்தைச் சோதிக்க, பாலில் போடுவார்கள். பாலே நீல நிறமாகிவிடும். அது போல் நீலவண்ணனான திருமால் பாற்கடலில் பள்ளி கொள்ள, அப்பெரு மானது கரிய நிறமான கருஞ்சோதி வெண்மையான பாற்கடலில் பரவி, பாற்கடல் கருங்கடலாகி விட்டது என்கிறான் கவிஞன்.

இந்நிலையில், விசுவாமித்திரர் பின்னரே இராமலட்சுமணர் போய் விடுகின்றனர். சீதாபிராட்டி தான் கண்ட அவ்வீரனையே நினைத்து நெடுநேரம் ஏங்க, அவள் உடல் வெப்பமடைந்தது. சீதையை வாட்டும் அந்த வெப்பம் தன்னையும் தீண்டி விடுமோ என அஞ்சிச் சூரியன் குளிர்ந்த கடலில் விழுந்து மறைந்தான்.

அன்னமென் நடையவட்கு அமைந்த காமத்தீ
தன்னையும் சுடுவது தரிக்கிலான் என
நன்னெடும் கரங்களை நடுக்கி ஓடிப்போய்
முன்னை வெங்கதிரவன் கடலில் மூழ்கினான்.

காவிய நிகழ்ச்சிகளை இயற்கையுடன் கலந்து ஒப் பிட்டுப் பாடுவது கம்பனுக்கு ஒரு சிறப்பு. இருட்டு வந்தது இருட்டுக் கறுப்பாயிருந்தது என்பது தவிர வேறு எப்படி வர்ணிக்க முடியும்? ''ஆலகாலமெனும் கொடிய நஞ்சு உலகெங்கும் பரவிவிட்டதோ? கடல் பொங்கி உலகம் இருண்டுவிட்டதோ? நான் கண்ட கரிய நிற அழகனை எல்லோரும் காண, யாவரும் அவனையே நினைத்ததால் உலகம் பூராவும் கருமை யாகி விட்டதோ? யமனுடைய கரியநிறத்தை கரிய மையுடன் கலந்து உலகம் பூராவும் பூசி விட்டார் களோ? என்றெல்லாம் சீதாபிராட்டி இருட்டைப் பழிக்கிறாள்.

ஆலம் உலகில் பரந்ததுவோ? ஆழி கிளர்ந்ததோ?
அவர்தம்
நீல நிறத்தை எல்லோரும் நினைக்க அதுவாய்
நிரம்பியதோ?
காலன் நிறத்தை அஞ்சனத்தில் கலந்து குழைத்துக்:
காயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ? விளைக்குமிருளாய்
விளைந்ததுவே.

இத்தகைய இருளுக்கு நடுவில் சந்திரன் தோன்று கிறது. இருட்டை விரட்டி, சடையப்பவள்ளலின் புகழ் போல் பரந்து விளங்கியது என **பண்ணை வெண் ணைச் சடையன் புகழ்போல் எங்கும் பரந்துள வால்** என்கிறது கவிஞரின் நன்றியுள்ள வாக்கு. இருளில் சீதாபிராட்டியை எண்ணி அமர்ந்திருந்த இராமபிரான், ''என் மனம் தவறான வழியில் செல் லாது. என் மனம் அந்த மங்கையை நினைக்கிறது என்றால் அவள் கன்னிப் பெண்ணாகத் தானிருக்க வேண்டும்'' என நினைக்கின்றார்.

ஏகும் நல் வழி: அல் வழி என் மனம்
ஆகுமோ? அதற்காகிய காரணம்
பாகுபோல் மொழி பைந்தொடி கன்னியே
ஆகுமே! இதற்கு ஐயுறவில்லையே

தன் மனம் தவறான வழியில் செல்லாது என்ற நம்பிக்கையும், பிறர் மனை நோக்காப் பேராண்மை யுடைய இராமபிரானை பிறர் மனைவிக்கு உடன் பிறந்தவன் **(பரதார சகோதரன்)** என்று சான்றோர் அழைப்பதற்குத் தக்க நல்லொழுக்கம் உடையவன் என்பது அறிந்து இன்புறலாம்.

பொழுது விடிகிறது. ''ஆகாயமாகிய அம்ப லத்திலே சூரியனாகிய் நடராஜப் பெருமான் தன் பொன்னிறக் கதிர்களான சடையை வீசிக் கொண்டு நடனமாடலானான்'' என பரமவைணவ நூலாகிய இராம காதையின் நடுவில் சைவத்தின் உயிர் நாடியான நடராஜப் பெருமானைப் பற்றிப் பேசுவது கவிஞர் பெருமானின் பேதமற்ற உணர்வையும், திருமுறை களையும் கண்டு களித்தவன் கம்பன் என்பதையறிய முடிகிறது. **''எண்ணரிய மறையினொடு''** என்ற கம்பன் பாட்லையும், மணிவாசகப் பெருமானின் திருப்பள்ளி எழுச்சியின் **''இன்னிசை வீணையர்''** என்ற பாடலையும் ஒப்பிட்டுப்பார்த்து இன்புற வேண்டுகிறோம். பொழுது விடிந்தவுடன் விசுவா மித்திரருடன் இராம லட்சுமணர்கள் ஜனகரின் சபையை அடைகின்றனர். புதியதாக வந்த அந்த இரு இளைஞர்களையும் **''இரு கண்களால்''** ஜனகன் கண்டதாகக் கூறுகிறார். **ஞானக் கண்** இராமபிரான் தெய்வீகமானவன் என்பதையும் **ஊனக்கண்** ஒரு அரசகுமாரன் எனக் கண்டதாகவும் குறிப்பு. விசுவாமித்திரர் ''இவர்கள் உனது விருந்தாளிகள். உனது யாகங்களைக் காணவந்துள்ளனர். நீ உன் திருமகளை, உன்னிடமிருந்த சிவதனுசை எடுத்து வளைப்போருக்குக் கொடுப்பதாகக் கூறியுள்ளா யல்லவா? அந்த **வில்லையும் காண** வந்துள்ளனர். இவர்கள் தசரத மகாராஜனுடைய மக்கள்'' என இராம பிரான் பிறந்த குலப்பெருமையும் இராமபிரானது வீரத்தையும் கூறினார். தாடகையை அழித்தது பற்றிக் கூறும் போது, ''அலையடிக்கும் கடலின் உருவம் நீலம். அத்தகைய நிறத்தையுடைய இராமபிரானின் பருத்து உயர்ந்த தோள்களை உற்றுப்பார். இந்த வீரனுடைய வில்லிலிருந்து புறப்பட்ட இராமபாணம் தாடகையின் மார்பை ஊடுருவி மலை, மரம், உலகத் தையே ஊடுருவிற்று'' என இராமபிரானின் கைவண் ணம் கூறினார்.

அலையுருவக் கடல் உருவத்து ஆண்தகைதன்
நீண்டு உயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீ உருவ நோக்கு ஐயா!
உலையுருவக் கனல் உமிழ் கண் தாடகை தன்
உரம் உருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற்று ஒருவாளி

**உருவ உருவ** என ஆரம்பித்து **உருவி உருவி** என முடியும் இம்மந்திரக் கவிதை இராமபாணம் 'விர்' என வரும் சத்தத்தை நம் காதுகளுக்குக் கொண்டு வருகிறது. அகலிகைக்கு நற்கதியளித்த வரலாற்றை யும் விசுவாமித்திரர் கூறி முடிக்க, ஜனகர் ''இராம பிரானான இவ்வீரர் நமக்கு மருமகனாகக் கிடைப் பாரோ?'' என பிரமித்த வேளையில் 5000 பேர் வில்லை எடுத்து வருகின்றனர் என்பது வான்மீகர் வாக்கு. அறுபதினாயிரர் எடுத்து வந்தனர் என்பது கம்பன் வாக்கு. இதைக் கேட்டபோது **''உறுவலி** யுடையவர் எடுத்து வந்தார் எனப் பாடலை ஆரம் பித்தார். இலக்கண சுத்தமாக வரவேண்டுமென்பதற் காக **அறு பதினாயிரர்** என்றார். பதினாயிரத்தை இரண்டால் வகுத்து அறுத்தால் 5000 தானே வரு கிறது'' எனச் சான்றோர்கள் நயம் கூறுவர்.

கம்பீரமாக நிற்கும் இராமபிரானைக் காண்கி றார் ஜனகர். இராமனை அடையத் தடங்கலாக இருக்குமோ என வேதனையளிக்கும் வில்லையும் காண்கிறார். தன் மனக்கண்களால் சீதாராமர்களை நிறுத்திவைத்துப் பார்க்கிறார். இத்தகைய நிலையில் ''இந்த சிவதனுசு தட்சயாகத்தை அழித்த பெருமை யையுடையது'' எனச் சதானந்தர் என்ற மந்திரி கூறும் போது'' தட்சயாகத்தையழித்த மாதிரி சீதையின் திருமண வேள்வியையும் தடுத்து விடுமோ?'' என, அங்கிருந்த அனைவரும் பிரமிப்புடன் கேட்க ''சீதா பிராட்டியாக பூமியைக் கலப்பையால் உழும்போது கிடைத்தவள். அழகு செய்த தவம் இந்த அம்மை. குணவதி என இவளைக் கூறினால் போதாது. நற் குணங்கள் இவளை யடைந்து பெருமை பெற்றன!'' எனச் சதானந்தன் கூறிமுடிக்க குருவான விசுவாமித்ரர், இராமனை உற்று நோக்க, ஆகுதி நெய்யைக்கண்டு தாவும் அனல் போல் **இராமபிரான் எழுந்தார்! இராமபிரானுக்குக் குருபார்வை கிடைத்துவிட்டது. குருபார்வை திருமணப் பேற்றையளிக்குமல்லவா?**

(தொடரும்)

# திருவெள்ளக் குளத்துள் அண்ணா!

- திருமதி ஜெ. அனுசுயா, எம்.ஏ.,எம்ஃபில்.

பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அருச்சை என ஐந்து நிலைகளில் அருள் பாலிக்கின்றார் எம்பெருமானாகிய நம் திருமால்.

''விண்மீதிருப்பாய், மலைமேல் நிற்பாய்,
கடற்சேர்ப்பாய்
மண்மீதுழல்வாய், இவற்றுள் எங்கும்
மறைந்துறைவாய்
என்மீதியன்ற புறவண்டத்தாய் எனதாவி
உன்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயே''

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் திருமாலின் ஐந்து நிலைகளை உணர்த்தியிருப்பதை நாம் உணர்ந்து மகிழலாம்.

நம்மைப் போன்ற அடியார்கள் உய்வடையும் பொருட்டு எம்பெருமான் இப்பூவுலகில் திவ்விய தேசங்களில் அர்ச்சாவதார மூர்த்தியாய் சேவை சாதித்துத் திருவருள் புரிவதால் அடியார்கள் பரமபதம் பெற அர்ச்சாவதார வழிபாடே எளிது என்று அறிவுறுத்துகின்றார் மணவாள மாமுனிகள்.

''செய்ய பரத்துவமாய் சீரார் வியூகமாய்
துய்ய விபவமாய்த் தோன்றிஇவற்றுள் -
எய்து மவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது''

என்பது அவர்தம் வாக்கு.

உயர்வற உயர்நலம் உடைய இறைவனால் - மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளதிவ்விய தேசங்கள் 108 ஆகும்.

சோழ நாட்டில் 40 திவ்விய தேசங்களும் பாண்டி நாட்டில் 18 திவ்விய தேசங்களும், மலை நாட்டில் 13 திவ்விய தேசங்களும், நடுநாட்டில் 2 திவ்விய தேசங்களும், தொண்டை நாட்டில் 22 திவ்விய தேசங்களும், வடநாட்டில் 12 திவ்விய தேசங்களும், திருநாட்டில் ஒரு திவ்விய தேசமும் ஆக ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள திவ்விய தேசங்கள் 108 ஆகும்.

''ஈரிருபதாஞ் சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர்பதின்மூன்றாம் மலைநாடு ஓரிரண்டாம் -
சீர்நடு நாடு
ஆறோடீரெட்டுத் தொண்டை அவ்வட
நாடு ஆறிரண்டு
கூறும் திருநாடு ஒன்றாக் கொள்''

என்ற பழம் பாடல் திவ்விய தேசங்கள் 108 ஆவதை நாடு வாரியாக வகுத்துக் காட்டக் காண்கின்றோம்.

வடநாட்டுத் திவ்விய தேசங்கள் பன்னிரண்டில் ஒன்றாகத் திருப்பாற்கடல் கூறப்பட்டு இருப்பினும், அங்கு நேரில் சென்று தரிசித்தல் இயலாது. திருப்பாற்கடல் திவ்விய தேசத்தையும், பரமபத திவ்விய தேசத்தையும் எம்பெருமானே தம் பரம பாகவதர்களுக்குத் தாமே அழைத்துச் சென்று சேவை சாதிப்பார் என்பது வைணவக் கொள்கையாகும்.


இப்பூவுலகில், பூதவுடலில், காணத்தக்க புண்ணிய திவ்விய தேசங்கள் அனைத்திலும் மகிமை வாய்ந்த திவ்விய தேசம் தான் 23.6.99 அன்று மகா சம்ப்ரோட்சண வைபவம் கண்டுள்ள - நம்சோழ நாட்டில் அமைந்து விளங்கும் அண்ணன் பெருமாள் கோயில் என வழங்கும் திருவெள்ளக்குளம் திவ்விய தேசம் ஆகும்.

திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்து திருவெள்ளைக்குளத்துச் சீனிவாசப் பெருமாளை திருவேங்கடத்துச் சீனிவாசப் பெருமாளின் அண்ணன் எனப் போற்றியிருப்பதால் அண்ணன் பெருமாள் கோயில் என்பது திருவெள்ளக்குளத்திற்குத் திருப்பெயராக வழங்கிவரும் சிறப்பு நாம் உணர்ந்து மகிழத்தக்கது.

திருவேங்கடவனைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்யும் திருப்பாசுரம் ஒன்றில் ''அண்ணா'' என்று அழைத்துப் பாடியுள்ளார். அப்பாசுரம் பின்வருமாறு:

''கண்ணார் கடல்சூழ் இலங்கை இறைவன்தன்
திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல உய்த்தாய்
விண்ணோர் தொழும் வேங்கட மாமலை மேய
அண்ணா அடியேன் இடரைக் களையாயே''

(1038)



திருமங்கையாழ்வார் - குமுதவல்லி நாச்சியார்

இவ்வாறு திருவேங்கடவனை ''அண்ணா'' என்று அழைத்துச் சிறப்பித்த திருமங்கையாழ்வார், திரு வெள்ளறை சீனிவாசப் பெருமாளையும் ''அண்ணா'' என அழைத்துப் பாடியுள்ள திருப்பாசுரத்தையும் இங்கு நாம் கண்டு இன்புறலாம்.

''கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்
நண்ணார் முனை வென்றி கொள்வார்
மன்னு நாங்கூர்
திண்ணார் மதில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா அடியேன் இடரைக் களையாயே''
(1308)

திருமங்கை ஆழ்வார் இரு திவ்விய தேசப் பெருமாளரையே ''அண்ணா'' என்று அழைத்துப் போற்றியுள்ளார். முதலில் திருமலை வேங்கடவனை ''அண்ணா'' என்று போற்றினார். பிறகு திருவெள்ள றைப் பெருமானை ''அண்ணா'' என்று போற்றினார். வேறு எந்தப் பெருமாளையும் ''அண்ணா'' என்று சிறப்பிக்கவில்லை. திருவேங்கடத்திற்குப் பிறகு திரு வெள்ளறைப் பெருமானையே ''அண்ணா'' என்று பாடிச் சிறப்பித்ததால் அண்ணனுக்கே அண்ணன் ஆன பெருமை திருவெள்ளறைப் பெருமாளுக்கு உரித்தாயிற்று. அண்ணன் குடிகொண்ட கோவில் அண்ணன் கோவில் என்றாகித் திருவெள்ளறைக்கு ''அண்ணன் கோவில்'' என்ற பெயரே பெருவழக்காகி வழங்கி வருகின்றது.

திருவேங்கடநாதனும், திருவெள்ளறை நாதனும் வேறு வேறு அல்லர்; ஒருவரே என்பதை உணர்த்தும் வகையில்

''வேடுஆர் திருவேங்கடம் ஆய விளக்கே
நாடு ஆர் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்ச்
சேடுஆர் பொழில் சூழ் திருவெள்ளக் குளத்தாய்
பாடா வருவேன் வினை ஆயின பாற்றே''

என்ற திருப்பாசுரத்தையும் திருமங்கை ஆழ்வார் அருளியிருப்பதைக் காணுகின்றோம்.

திருவேங்கடத்தானாகவும், திருவேங்கடநாதனுக்கு அண்ணனாகவும் திருவெள்ளறைப் பெருமான்

திகழுவதால் திருப்பதிக்கு வேண்டிக்கொண்ட வேண்டுதலை திருவெள்ளறையில் செலுத்துவது ஒரு மரபாகவே இன்று விளங்கி வருகின்றது. ''தென்திருப்பதி'' எனவும் திருவெள்ளறையைக் கூறுவது வழக்கமாகும். திருப்பதியில் சீனிவாசப் பெருமாள் தனித்து நிற்கின்றார். ஆனால் தென் திருப்பதியான திருவெள்ளறையில் அலர் மேல் மங்கைத் தாயாருடன் சேர்ந்து ''பூவார் திருமகள் புல்கிய திருமார்பனாக''த் திகழ்ந்து வருவது சிறப்பம்சம் ஆகும்.

''பூஆர் திருமகள் புல்கிய மார்பா!
நாவூர் புகழ்வேதியர் மன்னிய நாங்கூர்
தேவா திருவெள்ளக் குளத்து உறைவோனே!
ஆ ஆ அடியான் இவன் என்று அருளாயே!''

என்பது திருமங்கையாழ்வார் திருப்பாசுரம்.

இத்திருத்தலத்தில் உள்ள சுவேத புஷ்கரணியில் மலரும் குமுதமலர் பறிக்க வந்த தேவமங்கை ஒருத்தி மானிடரின் பார்வைக்கு இலக்காகி இங்கேயே தங்கி விட நேர்ந்தது. அத்தேவ மங்கையான குமுதவல்லியையே சோழமன்னரின் படைத்தளபதியாகத் திகழ்ந்த நீலன், திருமணம் செய்யவிழைந்து, குமுதவல்லியாரின் நிபந்தனைகளை நிறைவேற்றிப் பின் திருமங்கைஆழ்வார் ஆனார் என்பது வரலாறு.

குமுதவல்லியாரின் அவதாரத் தலமாகவும், திருமங்கை ஆழ்வாரை இத்தமிழ் உலகிற்கு உருவாக்கித் தந்த ஒப்பற்ற புண்ணிய தலமாகவும் விளங்கும் பெருமையைத் திருவெள்ளறை திவ்விய தேசம் கொண்டு விளங்குகின்றது.

திருவெள்ளறை திவ்விய தேசத்தை வழிபடுவார் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளவாறு

''குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

என்ற பெரிய திருமந்திரத்தின் மகிமை கூறும் பாசுரத்தில் காட்டப்பட்டுள்ள பெருமைகள் யாவும் பெற்று இன்புறுவர் என்பது திண்ணம்.

திருவெள்ளறைத் திருத்தலம் திருமணவரம் நல்கும் ஒப்பற்ற திருத்தலமாகவும், மக்கள் பேறளிக்கும் மகிமை வாய்ந்த திருத்தலமாகவும் திகழ்ந்து வருகின்றது. ஒன்பது வயதில் மரணகண்டமென விதிக்கப்பட்டிருந்த சூரிய வம்சத்து இளவரசனான சுவேதன் இத்திருத்தலத்திற்கு வந்து வழிபட்டு மார்க்கண்டேயனைப் போல நீடித்த ஆயுள் வரம் பெற்றதால், ஆயுள் விருத்தி வழங்கக் கூடிய பிரார்த்தனைத் தலமாகவும் இத்தலம் திகழ்ந்து வருகின்றது.

திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தகைய மகிமைமிக்க திருத்தலத்திற்குத் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு மகாசம்ப்ரோட்சண வைபவம் நடைபெற்றிருப்பது நம் தமிழ் மக்கள் யாவரும் மகிழ்ந்து கொண்டாடத்தக்க மகத்தான வைபவம் என்பதில் யாதொன்றும் ஐயமில்லை.

''திருவெள்ளக் குளத்துள்
அண்ணா! அடியேன் இடரைக் களையாயே''

''திருவெள்ளக் குளத்துள்
எந்தாய்! அடியேன் இடரைக் களையாயே''
''திருவெள்ளக் குளத்துள்
ஆரா அமுதே! அடியேற்கு அருளாயே''

என்று திருமங்கையாழ்வார் பாடி வினைகள் யாவும் நீங்கிப் பரமபதம் பெற்றவாறு, நாமும் திருவெள்ளறை அண்ணாவை, எந்தாயை, ஆரா அமுதைப் பாடிப் பரவி, வினைகள் யாவும் நீங்கி வானவர் பதமும் வைகுந்தப்பதமும் பெற்றுய்வோமாக!

★★★

''எய்ப்பெனை வந்து நலியும் போதங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்து அராவணைப் பள்ளியானே''

பெரியாழ்வார்

# பிள்ளைலோகாச்சார்யர்

- திருமதி கோமதி ராகவன் FCA

வைணவ குருபரம்பரையில் ''ஈடு'' என்ற மிகச்சிறந்த திருவாய்மொழி வியாக்யானத்தை உல கிற்குத் தந்த ''வடக்குத் திருவீதிப்பிள்ளை'' என் கின்ற ஆசார்யரின் குமாரராகவும், சிஷ்யராகவும் திகழ்ந்தவர் பிள்ளை லோகாச்சார்யர். இவர் பூலோக வைகுண்டமாகிய திருவரங்கத்தில் ஐப்பசி திரு வோணமன்று அவதரித்தார். ''வடக்குத் திருவீதிப் பிள்ளையின் ஆசார்யரான நம்பிள்ளைக்கு ''லோகா சார்யர்'' என்ற திரு நாமம் உண்டு. அதன் படியே பிள்ளை லோகாசார்யரும் அவரது தந்தையாரின் ஆசார்யர் பெயரையே கொண்டு வழங்கப்படலானார்.

ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் முதலிய திவ்ய கிரந்தங்களின் ரஹஸ்யார்த்தங்கள் உபதேசம் வாயிலாக பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சிறந்த ஞானிகளுக்கே அவை விளங்கக்கூடியன வாகத் திகழ்ந்தன. அக்காலகட்டத்தில் பிள்ளை லோகாச்சார்யர் அனைவரும் அறிந்து கொண்டு பயன் படும் வகையில் தமது பிரபந்தங்களை இயற்றினார். அவர் அருளிச் செய்த ஸ்ரீவசனபூஷணம் என்னும் பிர பந்தம் அனைவருக்கும் பொதுவாகவும் ரஹஸ்யார்த் தங்களை கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டியும் விளங்கியது. மேலும் சிறந்த ரஹஸ்யார்த்தங்கள் அங்குமிங்கும் காணப்பெறாமல் ஒரே பிரபந்தத்தில் அமையப்பெறுமாறு செய்த பெருமையும் பிள்ளை லோகாசார்யருடையதே. மஹா வித்வான் காஞ்சி அண்ணங்கராசார்யர் இவ்வாறு கூறுகிறார். ''பிள்ளை லோகாச்சார்யர் முதன் முதலாக ஸ்ரீவைஷ்ணவ மண்ட லிக்கு மஹோபகாரம் செய்தருளினார். லோகாசார்ய ரென்ற திருநாமம் இவருக்கே தகும். இவ்விருள் தருமா ஞாலத்தின் அகவிருளை அறவே ஒழிக்க வல்ல திவ்ய சூக்திகளை அறிந்தருளினவர் இம் மஹாசார்யர்''.

சான்றாக, பிள்ளை லோகாச்சார்யர் ஸ்ரீ வசன பூஷணத்தில் ப்ரபத்திக்கு அதாவது சரணாகதி பண்ணு வதற்கு தேச, கால, ப்ரகார (சுத்தம் - அசுத்தம்) நியமம் இல்லையென்றும் விஷய நியமம் ஒன்றே அர்த்த மாகும் என்றும் கூறுகிறார். இது அவருடைய அபார கருணைக்கும் அனைவரும் அந்த பகவான் முன் ஒன்றே என்று அவர் கொண்ட கொள்கைக்கும் எடுத் துக் காட்டாகும்.

இவர் இயற்றிய தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்பன மற்ற நூல்களாகும். இவர் பிரம்மசர்ய விரதம் பூண்டு

''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்''
(நம்மாழ்வார் திருவாய்மொழி)

என்றவாறு அரங்கன் பணி செய்தார்.

திருவரங்கம் அன்னியர் படையெடுப்பில் நலி வுண்ட போது அரங்கனை வேறிடத்தில் எழுந் தருளப்பண்ணி நம்பெருமானின் அர்ச்சா அவதார மூர்த்தியைக் காப்பாற்றினார்.

ஸ்ரீமணவாள மாமுனிகளின் ஆசார்யரான திரு வாய்மொழிப் பிள்ளைக்கு இவரே ஆசார்யராகத் திகழ்ந்தார். அழகிய மணவாளப் பெருமாள் பிள்ளை என்ற வைணவச் சான்றோரும் இவர் சிஷ்யரே. பெருமாள் பிள்ளையின் புதல்வியையே ஸ்ரீமணவாள மாமுனிகளின் தந்தையான திருநாவீறுடைய பிரான் தாசரண்ணர் மணந்தார். மற்றொரு சிஷ்யர் விளாஞ் சோலைப் பிள்ளை என்பவர். இவர் அக்கால இலக் கணப்படி தாழ்ந்த வருணத்தில் தோன்றியவர். இக் கடல் சூழ்ந்த மண்ணுலகத்தில் அனைவரும் நாராயண னுக்குப் ப்ரீத்தியானவர்களே என்ற கொள்கை கொண் டது வைணவம்.

''................ உலகோர்களெல்லாம்
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய
அப்பொழுதே
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு
நாரணற் காயினரே''

(திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமானுச நூற்றந்தாதி - 41)

என்றபடி பிள்ளை லோகாச்சார்யரும் விளாஞ் சோலைப்பிள்ளைக்கு அனேக ரஹஸ்யார்த்தங்களை யும் கற்பித்து திருவனந்தபுரம் சென்று சரீரம் கழியும் வரை அனந்தபத்மனாப ஸ்வாமிக்கு சேவை புரியு மாறு நியமித்தார்.

பிள்ளை லோகாச்சார்யரின் திருத்தம்பியான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இவரது சிஷ்யராகவும் இருந்து ''ஆசார்ய இருதயம்'' என்னும் மிக மகத்தான கிரந்தத்தை அருளிச் செய்தார். ''கண்ணி நுண் சிறுத்தாம்பு'' என்னும் நாலாயிர திவ்யப் பிர பந்தத்தில் உள்ள பாசுரங்களுக்கு மதுரகவி ஆழ்வார் வியாக்யானமிட்டருளினார்.

இவ்வாறாக அனைவர் பாலும் அன்பு பூண்டு சரணாகதி தத்தவம் போன்ற ரஹஸ்யார்த்தங்களுக் குச் சிறந்த வியாக்யானமிட்டும் அன்னியர் படை யெடுப்பிலிருந்து திருவரங்கனைப் பாதுகாத்தருளியும் தமக்கிட்ட பணியைச் செவ்வனே செய்தாற்றிய பிள்ளை லோகாச்சார்யர் நம்பெருமாள் அடியவர்க்கெல் லாம் இன்றும் ஜகத்ரக்ஷகராகத்தான் திகழ்கிறார்.

# ஒரு சிக்கலும் தீர்வும்

- முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை

கம்பன், தன் பெருங்காப்பியத்திற்கு உரிய கதைக் கருவைத் தமிழ் மண்ணிலிருந்து தேர்ந்து கொள்ளவில்லை. ஏன் என்ற வினாவிற்குப் பலரும், பல வாறாக விடை காண முயல்வர். என்னைப் பொறுத்த வரைப் பெண்மைக்கு ஏற்றம் தரவேண்டும் என்பதற்காகவே, சீதாபிராட்டியை மனத்துட் கொண்டு, அவன், இராமகாதையைத் தேர்வு செய்திருக்க வேண்டும்.

ஏனென்றால், தமிழ் இலக்கியவாதிகள், கம்பனுக்கு முன்வரை, ''ஒருத்திக்கு ஒருவன்'' என்பதையே வற்புறுத்தி வந்தனர். ஆடவர் ஒழுக்கத்தை நெறிப்படுத்த விரும்பிய கம்பன், ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்ற நிலையை உருவாக்க விரும்பியிருக்க வேண்டும். 'நடையில் நின்றுயர் நாயகன்' இராமன் - அவன் கருத்தை ஈர்த்திருக்கிறான். அதனால் தான், ''இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்'' என்ற நெஞ்சுறுதி கொண்டிருந்த இராமன் கதை அவன் காப்பியக் கருவாக மலர்ந்தது.

பெண்மை பற்றிய உயர் மதிப்பீடு கொண்டிருந்த, கம்பன் காப்பியத்தில், ஒரு இடம் என் நெஞ்சை நெருடியது. சீதாபிராட்டி, தாரை, மண்டோதரி முதலாய பெண் அரசியரை ஒளியூட்டி மகிழும் கம்ப நாடகத்தில், ஒரு இடம், சற்றே முரண்பாடாக என் கருத்தில் பட்டது. ஏன் இந்த முரண்பாடு? இதன் பின்புலம் யாதாக இருக்கும் என்ற, என் சிந்தனை ஓட்டத்தை, இராமகாதை ஆய்வாளர்கள் முன் பணிவுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பெண்களில் நல்லவர்கள் பலருண்டு. சிலர், தீயவராதலும் கூடும். இராமகாதையில், இவ்விரு வகை மகளிரும் வருகின்றனர். தாடகை, சூர்ப்பணகை முதலான தீய மகளிர்களைக் கம்பன் இனங்காட்டிக் கவிதை புனைகிறான்.

நல்லாரும், தீயரும் என இரு திறத்தாரும், பெண்களில் உண்டு என்பதை உடன்பட்டுக் கதை நடத்தும் கம்பன், ஒட்டுமொத்தமாக, ஓரிடத்தில் பெண் இனத்தையே இழித்துரைக்கிறான்.

பெண் என்பவள் யார்? தகுதி மிகப்படைத்த நம் முன்னோர் பலர், பெண்களை நாடி மணக்காது, தனித்து வாழ்ந்தது எதனால் என்ற வினவப்படாத சில வினாக்களைத் தானே முன்னிறுத்திக் கொண்டு, கம்பன் விடை தருவது, முரண்பாடு போல் தோன்றுகிறது. கம்பன் மதிப்பீடு இவைதாம்.

வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள். அதனை உணர்ந்த காரணத்தால்தான், தகுதி மிகப் படைத்த சான்றோர், இவர்கள் நமக்குப் பற்றுக் கோடாக அமைவார்கள் என்பதை மறுத்து, அவர்களை மனத்தாலும் நினையாது விட்டனர்...

இக்கருத்தமைந்த பாடல் வரிகள், அயோத்தியா காண்டம், கைகேயி சூழ்வினைப் படலத்தில் கவிக் கூற்றாகவே இடம் பெறுகிறது.

> ''வஞ்சனை பண்டு மடந்தை
> வேடம்'' என்றே
> நஞ்சு என மாதரை உள்ள
> லார்கள் தக்கோர். (21)

பாத்திரங்களின் குணநலன்களை, கதை நடத்திச் செல்லும் போக்கில், பிற பாத்திரங்களின் கூற்றுக்களால் வெளிப்படுத்துவது அரிய கலைப் படைப்பாகும். இந்த அரிய ஆற்றலை, தமிழின் முதல் காப்பியத்திலேயே வெற்றிகரமாகக் கையாண்டவர் இளங்கோவடிகள்.

''வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள்'' என்பது, கம்பனின் உள்ளார்ந்த கருத்தானால், சீதை முதலிய கற்பரசியரை அவன் போற்றிப் புகழ்வது முரண்பாடாக அமைந்துவிடுமே''.

மனமாற்றமடைந்து, தீமையைச் சார்ந்த கைகேயியைச் சித்தரிக்கும் நேரத்தில், உணர்ச்சி வசப்பட்டுக் கம்பன் இவ்வாறு மதிப்பீடு செய்து விட்டான் என்று கற்பித்துக் கொள்ளலாமா?

உணர்ச்சியில் கவிஞன் இவ்வாறு மொழிந்து விட்டான் என்றால், அடிமனத்தில், கம்பன் பெண்மை பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடு, மோசமானதுதான் என்று ஏற்க வேண்டி வருமே! ஏற்க முடியுமா?

கேள்விகள், ஒன்றன்பின் ஒன்றாக, நம்முள் எழுகின்றன. அவற்றுக்கு விடை காணும் முன்பு, கம்பன் உணர்ச்சிவயப்படக் காரணமாக அமைந்த காப்பிய நிகழ்வுகளை நினைவு கூர்தல் வேண்டும்.

மந்தரையின் சொல்லாற்றலால், கைகேயி மனம் மெல்ல மெல்ல மாற்றம் அடைகிறது. தன் கணவனிடம், இரு வரங்களையும் கேட்க உடன்படுகிறாள். அக்காலை கவிஞன் கைகேயியை இழித்துரைக்கக் காணோம். மாறாக, அவளது மனமாற்றத்தின் பின் விளைவுகளை நினைவு கூர்ந்து மகிழ்கிறான்.

''தீய மந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது''. (ம.சூ.ப. 85)

எனப் படைக்கும் கம்பன், கைகேயியைத் ''தேவி'' என்றும், அவள் தூயசிந்தையுடையாள் என்றும் இசைந்து போற்றுகின்றான்.

காப்பியப் போக்கு முழுதும் உணர்ந்து, கதை நடத்தும் கவிஞனுக்கு, ஒரு பாத்திரத்தின் செயற்பாட்டால் ஏற்படும் பின்விளைவும் தெரிந்தேயிருக்கும். எனவே கம்பன், கைகேயி மனமாற்றத்தின் பின் விளைவை நினைத்து, அவள் மனமாற்றத்திற்குப் பாராட்டு மொழிகளையும் வழங்குகின்றான்.

அரக்கர் பாவமும் அல்லவர்
இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள்
தூமொழி மடமான்
இரக்கம் இன்மை அன்றோ
இன்றுஇவ் வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
பருகு கின்றதுவே. (ம.சூ.ப. 86)

கைகேயியைத் ''தூமொழி மடமான்'' என்று பாராட்டிப் பதிவு செய்யும் கம்பன், காப்பிய நோக்கம் அவள் மனமாற்றத்தால்தான் அமைந்தது என்பதை உடன்படுகிறான். மேலும், இராமன் புகழை இவ்வுலகம் பருகி மகிழவும், அவளே காரணம் என்று பெருமிதப்படுகிறான்.

காப்பியப் போக்கில், ஒரு பாத்திரத்தின் மன மாற்றத்தைக் கதையில் நடத்திக் காட்டி, அப்பாத்திரத்தைப் புகழ்ந்து பேசி, அதன் விளைவுகளை அங்கீகரித்த கவிஞன், பல பாடல்களுக்கு அப்பால், மீண்டும் சினந்தெழுந்து, அப்பாத்திரத்தின் மீது கொண்ட கோபத்தால், தன் கூற்றாகவே, பெண்கள் வஞ்சனையின் மறுவடிவம் என்று பேசுவது, எவ்வகையில் ஏற்கத் தக்கதாகும் என்ற வினா, நம்முள் எழுகிறது. நாம் திகைத்து நிற்கிறோம்.

மேலும் மேலும் இந்த முரண்பாடு வளர்ந்து கொண்டே போகிறது. கைகேயி வரம் கேட்டபின், மீண்டும் தயரதன் இரக்கும் இடத்தில், கம்பன் கைகேயியை,

''தன்நேர் இல்லாத் தீயவள்''

என்று கவிக் கூற்றாக ஏச்சுரைக்கிறான். இயற்கையே சினம் கொண்டதைச் சித்தரிக்கையில்,

''கேகயத்து அரசன் பயந்த விடத்தை,
இன்னதோர் கேடு சூழ்
மா கயத்தியை''.

எனத் தன் கூற்றாகப் பதிவு செய்து, கைகேயியை ..கேகயன் பெற்றெடுத்த விடம்' என்றும், அவள் ஒரு பெரிய கயமையுடையாள் என்றும் குமுறுகிறான்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆத்திரத்தில் விளைந்த அரும்கொடையாக, 'கயவன்' என்ற ஆண் பாற்சொல்லுக்கு நிகராக, முதன்முதல் 'கயத்தி' என்ற பெண்பாற்சொல் கம்பன்வழி நமக்குக் கிடைக்கிறது.

மேலும் கைகேயியை,

''தீ அடங்கிய சிந்தையாள்'' (57)

என்றும்

''இடை ஆன பாவி'' (59)

என்றும்

''வெம்பாவம் முற்றிய பேதை'' (65)

என்றும் கடுஞ்சொற்களால் கம்பன் கனன்று உரைத்துக் கதை நடத்துகிறான்.

கைகேயி சராசரி மானுடப் பெண் அல்லள். மானுடத்தின் மேம்பட்ட தெய்வத்தன்மையள் என்பதை உணர்ந்து உரைத்தவன் கம்பன். மந்தரை மனமாற்றம் உண்டாக்க வேண்டி, உறங்கிக் கிடக்கும் கைகேயியைக் கைகளால் தீண்டுகிறாள். கைகேயி கண் விழிக்கிறாள்.

இங்கே கம்பன்,

''தீண்டலும் உணர்ந்த அத்
தெய்வக் கற்பினாள்'' (ம.சூ.ப. 52)

என்று வடித்துக் கைகேயியைத் தெய்வக் கற்பு உடையவள் என்று உணர்த்துகின்றான்.

தீண்டியவள், சொல்ல வருவது இன்னது என்பதனை, அவள் கூறாமலேயே உணரும் பேராற்றலையே, கம்பன், ''தெய்வக் கற்பு'' என்று கூறியிருக்க வேண்டும் என்பது, ''ஐயப்படாது....'' என்று தொடங்கும் திருக்குறளால் தெளிவாகிறது.

கைகேயி தெய்வக் கற்பினள் என்று பதிவு செய்ததை, மறவாது போற்றி நின்று, பல ஆயிரம் பாடல்களுக்கு அப்பால், இராமன் கூற்றாக,

''தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும்'' என்று அவளைத் தெய்வமாக உயர்த்தியும் காட்டு கின்றான்.

இவ்வாறாகக் கைகேயியைத் ''தெய்வக் கற் பினள்'' என்றும், ''தூமொழிமடமான்'' என்றும், அவள் செயலால்தான், இராமன் புகழ் உலகமெலாம் பரவியிருக்கிறது என்றும் ஏற்றுப் போற்றும் கம்பன், பின் ஏன்? எதற்காகப் பெண் இனத்தையே ''வஞ்சனை யின் மறுவடிவம்'' என்று இழித்துரைக்க வேண்டும்?

இதற்கு விடை காண, தமிழ் இலக்கியங்களின் மேல் ஒரு கண்ணோட்டம் செலுத்தியாக வேண்டும்.

கவிஞன், தாம் வாழும் சமூகம் எப்படிப்பட்ட தாக இருந்தாலும், அதனுடன் தன்னை முற்றிலுமாக இணைத்துக் கொள்ளாது, அதிலிருந்து, மேலெழுந்து, சிந்திக்கும் ஆற்றலுடையவனாகவே இருப்பான். அதுவே, அவனை, நம் வணக்கத்துக்குரியவன் ஆக்கு கிறது. இந்த அளவுகோல், தமிழ் இலக்கியம் படைத்த கவிஞர்கள் பலருக்கும் பொருந்தும்.

என்றாலும், கவிஞன் காணவிரும்பும் சமு தாயம் ஒன்றாகவும், அவன் வாழும் சமுதாயம் ஒன்றாகவும் வேறுபட்டே நிற்கும்; நின்று வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

கண்ணகியை, மாபெரும் பத்தினியாக இளங்கோ சித்திரிக்கிறான். ஆனால், அவள் வாழ் வைப் பறிகொடுத்த ஓர் அபலையாகவே சமூக நோக்கில் காணப்படுகிறாள்.

மணிமேகலையை பசிப்பிணி தீர்த்த அறச் செல்வி என்கிறது காப்பியம். மாதவி மகளாகப் பிறந்ததால், சமூகத்தில் ஒரு ஆடவனுக்கு மனைவி யாக வாழ முடியாது, துறவு மேற்கொண்ட பெண்மை யின் அவலம், சமூகத்தில் நிழலாடுகிறது.

பெண்மைக்குப் பேரிடம் தர முயலும் பாரதி கூட, ஒரு நேரத்தில், சமூகத்தின் போக்கிலிருந்து விடுபட இயலாது, ''பெட்டைப் புலம்பல்'' என்று பெண்களை நெகிழ்ந்துரைக்கிறான்.

கம்பனின், நிகழ்காலச் சமூகத்தில், பெண் ணுக்குப் பெரிய மரியாதை ஏதும் இருந்திருக்க வாய்ப்பில்லை. கவிஞன் விருப்பம், பெண்மையை உயர்த்திச் சிறப்பிக்க வேண்டும் என்று இருந்தாலும், அவன் வாழும் சமூகத் தாக்கத்தால், ஆங்காங்கே பெண்மை பற்றிய சமூகம் சார்ந்த மதிப்பீடு, அவனை யும் அறியாது வெளிப்பட்டு விடலாம். கம்பன் சினம் இவ்வாறு கொப்பளித்து வந்திருக்கலாம் என்று கருதுவது ஒன்று.

இரண்டாவதாக, வேறு ஒரு வகையில் சிந்திக்கலாம்.

கவிஞனுக்குள் காப்பியம் நடத்துவதில், பல சிக்கல்கள் உண்டு. தன் விருப்பம் யாதாயினும், சமூக விருப்பங்களுக்கும், மரபுகளுக்கும், அவன் அடி பணிந்தே ஆகவேண்டும். தீயவன் என்று, நன்குணர்ந்த ஒருவன், இறந்துவிடுகிறான். இடுகாட்டில், அவ னுக்கு இரங்கல் கூட்டம். நாம் என்ன செய்ய இயலும்? அவன் தீமைகளை உள்ளடக்கிக் கொண்டு, பல ரோடும் இணைந்து, நாமும் நல்ல நல்ல வார்த்தைகள் சொல்லி நிற்கிறோம். இச்செயல், நம்மை மீறிய சமூகத் தாக்கத்தால் அமைவது. இதேபோல் உணர்ந்த நன்மை யையும், சில நேரங்களில் சமூகத்தோடு இணைந்து, தீமை என்று நாம் வழிமொழிய வேண்டிவரலாம்.

கைகேயி தெய்வத் தன்மையள். அவள் மன மாற்றமே, இராமன் புகழுக்குக் காரணம் என்று தெளிய உணர்ந்த கவிஞன், அவள்மீது அளப்பரிய மரியாதையால், முன்னே புகழ் மொழிகளை அடுக்கி யிருக்க வேண்டும். ஆனால், சமூகம் பின் விளைவு களைப் பற்றி எல்லாம் ஆலோசிக்கும் திறன் படைத் தது அன்று. ஒரு பெண் - ஒருவன் மனைவி - அவள், கணவன் மரணத்திற்கே காரணமாகிறாள் என்று அறியும் ஒரு சமூகம், அவள், எவ்வளவு பெரியவ ளானாலும், அவளை ஏற்காது, இழி சொற்களால் தூற்றவே செய்யும்.

அவ்வாறு, கைகேயியைத் தூற்றும், ஆத்திரம் கொண்ட ஒரு சமுதாயத்தில், நாம் அன்னியப்பட்டு நின்றால், சமூகம், நம்மையே ஐயுறும் என்ற நியாய மான அச்சத்தால் கம்பன், பத்தோடு பதினொன்றாக நின்று, கைகேயியை ஏசியிருக்கவும் கூடும்.

இவற்றில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொண் டால் கவிஞனுக்குப் பெருமை. கம்பனுக்கு வெற்றி. ஏற்கவில்லை என்றால், கம்பன் முன்னுக்குப் பின் முரண்பட்டிருக்கிறான் என்ற குற்றம் வந்து சேரும்.

நான் வாதப்பிரதிவாதங்களை எடுத்து முன் வைத்துள்ளேன்.

நீதிபதி நீங்கள். தீர்ப்பு உங்கள் கையில்.

# ஸ்ரீ சாரதா புஜங்கம்

**(ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசாரதாபீடம் ஸ்ரீசந்திரசேகரபாரதி சுவாமிகள் அருளிச் செய்தது**
**தமிழாக்கம் : கோவை தேவிதாசன் ஸ்ரீ ஐ.கோ. ராமநாதன் அவர்கள்)**
**விரிவுரை : ஸ்ரீ பாரதி தீர்த்ததாசன்**

''மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு'' என்று பாரதியார் நம் தேசத்தைப் போற்றினர். மாமுனிவர்களின் திலகமாய், சிவபெருமானின் மறு உருவாய், உலகம் உய்யக் கேரளத்தில் காலடியில் உதித்து, இந்தியத் திருநாடெங்கும் முப்பத்திரண்டு ஆண்டுகட்குள் தமது காலடிபட நடந்து, தீமையான புறச்சமயங்களை விரட்டி, நாலா திக்குகளிலும் ஒவ்வொரு மடம் ஏற்படுத்தி இந்துமதம் சிறப்புற்று விளங்கச் செய்த ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் பெருமையை அறியாதவரே கிடையாது. தென் திசைக்கு அப்பெரியார் நிறுவிய ஸ்ரீமடம் கர்நாடகத்திலுள்ள ஸ்ரீசிருங்கேரி ஸ்ரீசாரதா பீடமென்பதை அனைவரும் அறிவர். இந்தச் சிம்மாதனத்தை அலங்கரித்த பெரியோர்கள் ஒருவரையொருவர் விஞ்சி ஞானத்தின் உருவங்களாக விளங்குவது உலகப் பிரசித்தம். அத்தகைய மகான்களில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜகத்குரு சந்திர சேகரபாரதி மகாசன்னிதானம் ஒருவர். அந்தப் பெரியோர் அருளிய ''ஸ்ரீசாரதா புஜங்கம்'' என்ற நூல் மிக அழகியது. அதை ஸ்ரீ சாரதா பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மகாசன்னிதானம், ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த சன்னிதானம் அவர்களின் ஆசியுடன் கோவை மகாவித்வான் கவியரசு நடேசக் கவுண்டர் அவர்களின் மாணாக்கர் ஸ்ரீதேவிதாசன் என்ற ஸ்ரீ ஐ.கோ. ராமநாதன் அவர்கள் தமிழ்ப் பாடல்களாகப் பாடியுள்ளார். ஸ்ரீமகாசன்னிதானம் அவர்களின் உத்திரவு பெற்று அடியேன் இவ்வழகிய நூலுக்கு விரிவுரை எழுதும் பேறுபெற்றேன். ஸ்ரீ பாரதி தீர்த்த மகா சன்னிதானம், அவர்களின் திருவடிகளே சரணம்.

புஜங்கம் என்பது பாம்பு நெளிந்து செல்வதுபோல வளைந்து வளைந்து இயங்கும் அரிய ஓசை நலம் திகழும் ஒரு பாவினம். ஸ்ரீ ஆதிசங்கரர் முருகப் பெருமான் மீது 'ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்கம்' என்று ஓர் ஒப்பற்ற நூல் அருளிச் செய்தார். இதே நடையில் பவானீ புஜங்கம், காயத்ரீ புஜங்கம், ஆஞ்சநேய புஜங்கம் முதலான நூல்களும் உண்டு. இது ஸ்ரீ சாரதா தேவியின் மீது பாடப்பெற்றது.

எந்த ஒரு நன்மை கிடைத்தாலும் முன்னமே தவஞ்செய்த புண்ணியம் இருந்தால்தான் எதுவும் கிட்டும். இவ்வுலகத்தில் (ஈண்டு) தவம் செய்தால் வேண்டியதை மறுமையில் பெறலாம்.

வேண்டிய வேண்டியாங்கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்

என்பது வள்ளுவர் வாக்கு. ''இறைவனே! நான் தவம் செய்யவில்லை; மலரிட்டு வழிபடவில்லை; உபயோகமற்ற பிறவியுடையவன். உன் அடியவருக்கு நடுவில் இருக்கும் பேறு கிடைக்கவில்லை. உன் திருவடியிற் சேரும் பயனையருள்க!''.

எனத்தான் தவஞ்செய்யாத நிலையினைக் காட்டுவதாகத் திருவாசகத்தில்

தவமே புரிந்திலன்: தண்மலர் இட்டு முட்டா
திறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்:
உனக்கன்பருள்ளாம்
சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்: நின் திருவடிக்காம்
பவமே அருளு கண்டாய் அடியேற்கு எம் பரம்பரனே.

என்று பாடுகிறார் மணிவாசகர்.

தவத்தின் பெருமை எத்தகையது என்பதைக் காஞ்சிபுராணம்

தவம்மேலாம் நெறியாகும்: தவமே சிவனார்
தமைக் காட்டும்:
தவமே துறக்கம் அடைவிக்கும்: தவமே
நரனைத் தேவாக்கும்
தவமே வலாரி திசைக்கிறைவர் சார்ங்கன்
அயனும் ஆக்குவிக்கும்
தவமே கிடைப்பில் கிடையாத துண்டோ ?
என்று சாற்றினரால்

எனப் பாடித் தவத்தின் பெருமையை விளக்குகிறது. அருட்பிரகாச வள்ளலார் திருவொற்றியூர் இறைவனைக் கண்டு களித்து ''இது கிடைக்க என்ன தவம் செய்தேன்?'' என்கிறார்.

வில்வத் தொடும் பொற்கொன்றையணி வேணிப்
பெருமான் ஒற்றி நகர்
செல்வப் பெருமான் சிவபெருமான்
தியாகப்பெருமான் திரு அழகைக்
கல்வைப்புடைய மனங்களிக்க கண்கள்
களிக்கக் கண்டு நின்றேன்
இல்வைப்புடை யேன் அம்மா நான் என்ன
தவந்தான் செய்தேனோ

சிருங்கேரியில் நிறுவப்பட்டுள்ள ஸ்ரீசாரதா தேவியை எத்தனையோ பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனால் அடைந்தேன் என்கிறார் ஸ்ரீ சுவாமிகள். அம்மை கருணையில் நனைந்தவள். ஸ்ரீஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீசக்கரத்தில் நிலைபெற்றிருக்கும் அம்மை தம் மனத்தில் என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்கிறார். இறைவனை மறவாதிருக்கும் பேறுபெற்ற ஆனந்தம் எத்தகையது என்பதை இராமலிங்க சுவாமிகள் கூறி இறைவனை மறந்தால் உயிருடனே இருக்க இயலாது என்கிறார்.

மறப்பேனலேன் உனை ஒரு கணமேனும் :
மறக்கில் அன்றே
இறப்பேன் இது சத்தியம்: சத்தியம் :
சத்தியம் இசைத்தேன்

என்று சத்தியமே செய்கிறார்.

ஸ்ரீ சந்திரசேகர பாரதி சுவாமிகள் ''அம்மையை அடைய பல புண்ணியங்களைப் பல பிறவிகளில் செய்திருக்க வேணும். அந்த அன்னையின் நினைவு என் மனதில் என்றும் நிலைக்க'' என வேண்டுகிறார்.

முன்னைப் பிறப்புற்ற புண்யப் பெருக்கால்
முகில் பேறு எத்தொளிர்க: குருசக்கரத்தால்
உன்னித் தித்திப்பிக்க தயையூறி வாமும்
உரைமிக்க என் சாரதா பாக்யம் நாளும் (1)

அன்னை சாரதாதேவியின் அருள் நமக்கும் கிட்ட ஸ்ரீஜகத்குருவின் பாதமலர்களை வணங்கி வேண்டுவோமாக!

''இறைவனையடையும் வழி தமக்குத் தெரியவில்லை'' என்பதை அருட்பாவில்,

மருந்தறியேன் மணியறியேன் மந்திர
மொன்றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கை
நிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன்
அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினி
லோரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தை பிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ
இருந்ததிசை சொலவறியேன் எங்ஙனம்
நான் புகுவேன்
யார்க்குரைப்பேன்? என்ன செய்வேன்?
யாது மறிந்திலனே!

என்று இராமலிங்கர் பாடுகிறார். ''பாடிப்பாடி உருகி ஆடித் தொழுது இறைவன் திருவடியைக் கூட வேணும். உடலை உதறி உலகப்பற்று நீங்கி முத்தி வீடுபெற'' விண்ணப்பம் செய்கிறார்.

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு
ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்தாடு
நின் கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி இப்புழுக்கூடு
நீக்கெனப் போற்றி பொய் யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே.

என்று பாடுகிறார் மணிவாசகர். ''என்னால் எப்படிப் பாட முடியும்? எல்லாம் உன் செயல்தானே! என்னால் ஆவது என்ன?

பாட்டுவித்தால் பாடுகின்றேன்: பணிவித்தால்
பணிகின்றேன்: பதியே! நின்னைக்
கூட்டுவித்தால் கூடுகின்றேன்! குழைவித்தால்
குழைகின்றேன்: குறித்த ஊனை
ஊட்டுவித்தால் உண்கின்றேன், உறங்குவித்தால்
உறங்குகின்றேன்: உறங்காதென்றும்
ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோ!
இச்சிறியேனால் ஆவதென்னே.

என்பது இராமலிங்கர் வாக்கு. அவனை வணங்க வேண்டும் என்றால் அவன் திருவருள் வேண்டுமென்பார் மணிவாசகர். அப்பர் சுவாமிகள் இறைவனது அருளிருந்தாலன்றி அவனைக் காண இயலாது என்பர்.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான்; வார் சடையான்; என்னி
னல்லான்
ஒப்புடையனல்லன்: ஒருவனல்லன்:
ஓருரனல்லன்: ஒருவமனில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணகக் காணினல்லால்
இப்படியன்: இந்நிறத்தன்: இவ்வண்ணத்தன்:
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே

அவனது அருளே கண்ணாகக் கொண்டு அவனைக் காண வேண்டும் என்பது அப்பர் சுவாமிகள் வாக்கு.

## பக்தியின் ஒன்பது நிலைகள்

பக்தியின் ஒன்பது செயற்பாடுகள் பின்வருமாறு:

1. யாதனம் - கோயில்கள் எடுப்பித்தல், நந்தவனம் அமைத்தல்
2. சிரவணம் - இறைவனின் பெருமை கூறும் நூல்களைக் கேட்டல்
3. கீர்த்தனம் - இறைவனின் பெருமை கூறும் பாடல்களைப் பாடுதல்
4. அர்ச்சனம் - இறைவனைத் திருமஞ்சனம் ஆட்டிப்பூச்சூட்டி, நிவேதனம் படைத்துப்புசித்தல்
5. ஸ்துதி - இறைவனின் துதிப்பாடல்களைத் தனித்தும், பலருடனும் பாடுதல்
6. வசனம் - இறைவனின் மகிமைகளை விவரித்தல்
7. வந்தனம் - இறைவனை அஸ்டாங்கமாக - பஞ்சாங்கமாக வணங்குதல்
8. ஸ்மரணம் - இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல்
9. தியானம் - சுகாசனம் முதலிய நிலைகளில் தியானித்தல்

இவ்வளவு கருத்துக்களையும் ஸ்ரீ ஆச்சார்யாள் ''மந்திரம் தந்திரம் தெரியாது, துதிசெய்யவும் அறிய மாட்டேன். என் துன்பத்தினை எடுத்துக் கூறவும் அறியமாட்டேன். உன் திருவடியை நம்பினவன் துக்கம் அடையமாட்டான் என்று நம்பி உன் அருளால் உன் திருவடி வணங்கி உன்னைச் சரணாகதி யடைகிறேன்.'' என்கிறார்.

ஸ்ரீசாரதா புஜங்க நூல் பாடும் இப்பெரியவர் தனக்கு அம்மையை அடைய வழி தெரியாது என அவையடக்கம் கூறுவதுபோல் பாடி, அம்மையின் அருளை முன்னிட்டுக் கொண்டு சரணாகதியடைவதுதான் வழி என நமக்கு வழிகாட்டுகிறார்.

அடியேன் மந்தரம் யந்த்ரம் துதி புரிய அறியேன்
அடியேன் உறுந்துயரம் அறையுமுறை அறியேன்
அறியேன் உன்அடி நம்பின் அவர் துன்பமடையார்
அனையே! உனருளாலுன் அடி
சரணமடைவேன்

அம்மையைச் சரணடைய குருசரணாரவிந்தங்களை அடைவோமாக!

மனிதப் பிறவியைக் கடலுக்கு ஒப்பிட்டுப் பேசுவர் மணிவாசகப் பெருமான். ''பிறவியான கடலில் வீழ்ந்து, துன்பங்களான அலைகளால் அலைக் கழிக்கப்பட்டு, பெண்ணாசையென்னும் காமமாகிய சுறாமீன் வாயிலகப்பட்டு, என்ன செய்வதென்றறியாது, ஐந்தெழுத்து என்னும் பஞ்சாட்சரமாகிய புணையைப் பிடித்துக் கொண்டுள்ளேன். பிறவாமை என்ற கரை காட்டியருளிய கருணையை என்னென்பேன்''.

தனியனேன் பெரும் பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையில் எற்றுண்டு மற்றொன்றின்றிக்
கனியை நேர் துவர் வாயார் என்னும் காலாறக்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்பட்டு
இனி என்னே உய்யுமாறு என்றென்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின்றேனை
முன்னவனே முதல் அந்தமில்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே.

என்றார். சம்சாரம் என்ற கடலில் மூழ்கினவன், ''யான்'' ''எனது'' என்ற அகங்கார மமகாரங்களை உடையவனாகி விடுகிறான். 'நான்' 'எனது' என்ற இடத்தில் இறைவன் வரமாட்டான். சிவபெருமானே கைவிட்டு விடுவார் என்கிறார் ஸ்ரீ ஜகத்குரு.

இறைவன் திருவடியைச் சேர்ந்தால்தான் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கலாம். ஏனையோரால் முடியாது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார்.

என்பது வள்ளுவர் வாக்கு. பிறந்த மனிதன் இறைவனை நினைப்பதில்லை. ஆசைக்கு அடிமையாகிறான். ஆசைப்பட்டதெல்லாம் கிடைத்துவிட்டால் நான் என்னுடையது என்ற ஆணவம் மேலிடுகிறது. கிடைக்காவிட்டால் கோபம், பொறாமை, வஞ்சனை முதலானவை உண்டாகி விடுகின்றன. எனவே இறைவனுக்கு இடமளிக்க வேண்டிய இதயத்தில் கெட்ட குணங்கள் ஏறிப் பாவக் கப்பலாக மாறிவிடுகிறான். பிறவிக் கடல் துயர்க் கடலாகி விடுகிறது. இறைவனது நாமம் கூறினால் பிறவிக் கடலில் விழவேண்டாம். துன்பம் வராது என்பர் அலங்கார ஆசிரியர்.



முடியாப் பிறவிக் கடலில் புகார்: முழுதும் கெடுக்கும்
மிடியாம் படியில் விதனப் படார்: வெற்றி
வேல் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே.

பாவக் கப்பலான ஒருவனைப் பரமசிவனும் கைவிட்டு விடுவார் என்றால் என்னவாகும்? அந்நிலையில் பெற்றதாய்தான் காப்பாற்ற வேணும்.

எவ்வளவு குற்றங்கள் செய்தாலும் பொறுப்பவள் அம்மை. அது அவளது இயற்கையான கருணையும் அருளும். அம்மையின் கருணையை வருணிக்க வந்த மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் ''அம்மையே! அளவில்லாத குற்றங்கள் செய்தாலும் பொறுத்தருளும் உன்னைத் தனது உடலில் பாதியாக ஏற்றுக் கொண்ட சிவபெருமான், மூன்றே குற்றங்களைப் பொறுக்கும் கங்கையைத் தலையிலே வைத்துக் கொண்டு ஆடுகிறார். உன்னையல்லவா தலையில் தூக்கிவைத்துக் கூத்தாட வேண்டும். இப்படி அவர் அறியாது செய்ததால்தான் 'பித்தன்' என உலகம் அவரைப் பேசுகிறது போலும்''.

அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணியுருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடை முடி வைத்தனன் அதனால்
பிளவியல் மதியம் சூடிய பெருமான்
பித்தன் என்றொரு பெயர் பெற்றான்
களமர் மொய் கழனி சூழ் திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே.

என்று தமது 'அகிலாண்டநாயகி மாலை' என்னும் நூலில் ''அம்மை அளவில்லாத குற்றங்கள் செய்தாலும் பொறுப்பவள்'' எனக்கூறுகிறார்.

சிவபெருமான் அருள் பெறச் சோதனை மிக்க பல சாதனைகளைச் செய்ய வேணும். அது என்னால் முடியாதென அறிந்து எளிதில் அருள் பாலிக்கும் உன்னையடைந்தேன். ''கண்ணைத் தோண்டியளிக்கும் கண்ணப்பன், மகனை அறுத்துக் கறி சமைத்தளிக்கும் சிறுத்தொண்டர், பெற்ற தந்தையின் காலை வெட்டிய சண்டீசர், மனைவியைத் தியாகம் செய்த இயற்பகை நாயனார் போன்று, செய்ய முடியாத செயல்களைச் செய்வோர்க்கே உன் கணவனான சிவபெருமான் அருளுவார். என்னால் அம்மாதிரியான தியாகங்களைச் செய்ய முடியாதென்றே உன்னை அடைந்துள்ளேன்.''

விழியிடந்து அப்பி, மகவரிந்து ஊட்டி
விருப்புறு தந்தை தாள் தடிந்து
பழியகன் மனையை உதவி, மற்றின்னும்
பல செயற்கரிய செய்தாற்கே
மொழியுநின் கொழுநன அருள் செய்வன் என்னால்
முடி தராதென்றுனை அடைந்தேன்
கழியுணர்வுடையார் புகழ் திருவானைக்
காஅகிலாண்ட நாயகியே.

என்று கூறி அம்மையை அடைவது எளிது என்று கூறுகிறார்.

''சம்சாரக் கடலில் மூழ்கி, சிவபெருமான் போன்ற தேவர்களாலும் கூடக் கைவிடப்பட்டு, பாபத்தின் இருப்பிடமாக உள்ள அறிவற்ற என் ஆன்மாவை உன்னுடைய திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்'' என்று அம்மையைப் பூரணமாகச் சரணாகதி செய்கிறார் ஸ்ரீசந்திரசேகர சத்குரு.

பவகாரி முழுகிப்பவன் முதலா விலகிப்
பாவங்கள் யாவிற்கும் வீடாகி நிலவி
அவமாம் என் அறிவேயில் ஆன்மாவை அம்மே!
அருளாழியே! நின்றன் அடியிலிடுகின்றேன்

பிறவிக்கடல் கடக்கப் பெருமாட்டி சாரதாவின் பேரருளை வேண்டுவோமாக!

# சைவமும் தமிழும்

- கலைமாமணி அ. அருளரசு மாசிலாமணி

"எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ் செவி நீள்முடிக்
கடக்களிற்றை கருத்தில் இருத்துவாம்"

சிவசம்பந்தமுடையது சைவம். சிவம் என்னும் செம்பொருளை பெறும் வழியே சைவ நெறி, மனிதனை வாழ்விக்கின்ற விதிமுறை. தமிழர் வாழ்க்கை சைவப் பிணைப்புடன் இருந்ததாக சிந்து வெளி நாகரீகம் எடுத்துக் காட்டுகின்றது. அன்றைய காலத்தில் வாழ்ந்த மக்கள் இறை நம்பிக்கையில் வாழ்வை அமைத்திருந்தனர். ஒரு மனிதனின் சமயம் என்பது அவனைப் பொறுத்து அமையும் அடிப் படைப் பண்பு. அவன் இதயத்தில் எதை உறுதியுடன் நினைக்கின்றானோ அதுவே அவனது உண்மை சமயமாகும்.

இயற்கையின் மோதல்கள்; போர்கள் உருவாகும்போது இறைவன் மீதுள்ள நம்பிக்கை அதிகரிக்கும்; நாட்டில் சோம்பேறித்தனமும் கலவரமும் அதிகமாகி விட்டால் நாத்திக வாதம் பரவும்; துன்பங்கள், கவலைகள், நோய்கள் இவைகள் மனித சமுதாயத்தை ஆக்ரமிக்கும் போது இறை நம்பிக்கை ஏற்படும். அதன்பிறகு சுய நலமின்மை, அன்பு, பரிவு இவைகள் தோன்றும்; கண்ணுக்குப் புலனாகாத இறைவனை உணர்வினால் உணரலாம் என்பதை அன்று முதல் இன்றைய கணிப்பொறி காலம் வரை பல வியத்தகு செயல்பாடுகள் மூலம் அறியலாம். ஆதி மனிதர்களாக வாழ்ந்த சிந்து வெளிதிராவிடர்கள் கடைப்பிடித்த கடவுள் கொள்கை மிக்க நாள் முதலாகவே சைவமும் தமிழும் இணைந்திருந்ததாக அறியலாம்.

முத்தமிழ் எனும் இயல், இசை, நாடகம் மூன்றையும் இறைவனே உருவாக்கினான் என்பது சைவத்தமிழர் கொள்கை. இயற்றமிழை தலைமைச் சங்கத் தமிழ் புலவனாக இருந்து இறைவன் வளர்த்தான் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. தனது இரு செவிகளிலும் இசைவல்லுநர்களான கந்தர்வர்களைக் குண்டலங்களாக அமைத்து இசைக் கலைக்கு உயிர் ஊட்டினான்; இறைவன் சாமகீதப் பிரியன். அவனே தலைசிறந்த இசை நாயகன்; நாடகத்தமிழுக்கு ஆசான். தில்லைக் கூத்தனே நாடகமாடி அக்கலைக்கு பெருமை சேர்த்தான். ஆகவே மணிவாசகர் ''நாடகத்தால் உன்னடியார் போல் நடித்தே ஆடுகின்றேன் அம்பலத்தே'' என்றார் மணிவாசகர்; ஆக முத்தமிழுக்கும் முதல்வன் இறைவனே! அதனால் தான் ''முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான்'' என்றார் அருணகிரிநாதர்.

பண்டைய தமிழர்கள் இயற்கையுடன் இணைந்து இறை வழிபாட்டை செய்து வந்தனர். அகம், புறம் என்று வாழ்வை அமைத்தனர். மலையிலே முருகன், காட்டிலே கண்ணன், மருதத்திலே இந்திரன், நெய்தலிலே வருணன். பாலையிலே துர்க்கை எனப் போற்றி வழிபட்டனர். இறைவனைப் பற்றிய தத்துவம் பரிபாடலில் கூறப்பட்டுள்ளது.

"தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்புநீ; மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறை நீ; பூதத்து முதல்வன் நீ
வெஞ்சுடர் ஒளியும் நீ; செஞ்சுடர் அளியும் நீ
அனைத்தும் நீ; அனைத்தினுட் பொருளும் நீ
ஆதலின் உணர்வும் உணர்வது மிலையே"

இப்பாடலில் இறைவனின் சொரூபநிலை காட்டப்பட்டுள்ளது. சங்கத்தமிழ் சைவ நெறியினை போற்றிய பாங்கு தெளிவாக கூறப்பட்டுள்ளது. சங்க காலமுதல் 20-ம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கியங்கள் பெரிதும் சைவ சமயத்தையே சிறப்பித்துள்ளன; போற்றாத இலக்கியங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

தமிழின் தோற்றத்தைக் கூறிய பாடலில் சைவத்தின் சிறப்பு இணைக்கப்பட்டுள்ளது.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே
வளர்ந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே
தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே
நடந்தோரென
மருப்பிலே வளர்ந்த பாவை மருங்கிலே
வளருகின்றாள்".

இப்பாடலில் தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சி இவைகள் சமய உணர்வுடன் கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் அகத்தியரைத் தென்னாட்டிற்கு அனுப்பித் தமிழ் வளர்க்க அருளிய தமிழ்த் தலைவன்; வடமொழிக்குப் பாணினி! அதற்கு இணையாகத் தென்மொழியாம் தமிழ்மொழியை அகத்தியர்க்கு அருளியவன், இதையே 20ஆம் நூற்றாண்டு கவிஞர் பாரதியும் போற்றுகின்றார்.

''ஆதிசிவன் பெற்று விட்டான் ஆரிய மைந்தன்
அகத்தியன் என்றோர் வேதியன் கண்டு
மகிழ்ந்தே
நிறைமேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்''

சைவமும் தமிழும் உடலும் உயிரும் போல் என்பதை இதனால் உணரலாம்.

''கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு
அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்''

என்பதில் தமிழும் சைவமும் கொண்ட தொடர்பு சிவத்தொடர்பு தெளிவாகி யுள்ளது.

''சைவம்'' என்ற சொல்லில் அமைந்துள்ள மூன்று எழுத்துக்களும் வல்லினம், மெல்லினம், இடையினம் என அமைந்துள்ளது போல் ''தமிழ்'' என்ற சொல்லும் மூவினத்திற்கு உரியது. சிவத்திலிருந்து சைவம் உருவானது. அதே போல் சிவத்திலிருந்தே தமிழும் தோன்றியது. ஆகவே தமிழும் சைவமும் ஒன்றே! திருவள்ளுவர் கடவுள் கொள்கையும் சைவமேயாகும்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று கடவுள் வாழ்த்தில் முதற்பாடலாக பாடியுள்ளார்; அகரம் என்பதில் தமிழ் எழுத்தையும் இறைவனையும் ஒன்றாக நினைத்துள்ளார் திருவள்ளுவர்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அவதரித்த நாவுக்கரசர் ஞானசம்பந்தர் போன்றோர்தாம் ''தமிழன்'' என்ற சொல்லை உணர்ச்சியுடன் முழக்கமிட்டவர்கள். ''தமிழ் ஞானசம்பந்தன்'' என்று தமிழ் உணர்வுடன் ''தமிழ் தமிழ்'' என்று தமிழ் மொழியை தற்காத்துத் தந்தவர் திருஞானசம்பந்தர்.

கொஞ்சு தமிழ் பாடினார் திருஞானசம்பந்தர்.
கெஞ்சு தமிழ் பாடினார் திருநாவுக்கரசர்.
மிஞ்சு தமிழ் பாடினார் சுந்தரர்.
(உருகும் தமிழ்) விஞ்சு தமிழ் பாடினார் மணிவாசகர்.

நாவுக்கரசர் ''சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்; தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்'' என்று பாடியுள்ளார். நாவுக்கரசர் தமிழ் இலக்கியத்திற்குத் தாண்டகம், திருவிருத்தம், திருநேரிசை, திருவங்க மாலை என்று பாடித் தமிழுக்குப் புதுமையூட்டினார்.

அதேபோல் ஞானசம்பந்தர் அவதாரத்திற்கும் காரணம் ''அசைவில் செழுந்தமிழ்வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல'' என்று பாடிப் போற்றுகின்றார் சேக்கிழார். இவரை ''நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்'' என்று சுந்தரர் போற்றுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவெண்ணை நல்லூரில் ''தூமறைபாடும் வாயால் சொற்றமிழ் பாடுக'' என்று சிவபெருமானே தமிழில் பாடுமாறு விரும்பி கேட்டார்.

இறைவனை - தமிழ் வழங்கிய பெருமானாகத் தமிழ்ச் சங்கத்து தலைமைப் புலவனாக மணிவாசகர் காட்டுகிறார். அவர் பாடிய திருக்கோவையார் ஞானத் தமிழ் இலக்கியம். சைவத்தின் தத்துவார்த்தத்தை நானூறு பாடல்களில் எடுத்துக்காட்டிய திறன் இலக்கிய வரலாற்றில் புதிய திருப்புமுனை ஆகும்!

சைவத்திலே அகப்பொருளை இணைத்த மணிவாசகரும், வைணவத்திலே அதனை இணைத்துப் பாடிய ஆண்டாளும் தமிழுக்கு ஞான ஒளி ஊட்டியவர்கள். ''எடுக்குமாக்கதை இன்றமிழ்ச்செய்யுளாய்'' எனச் சேக்கிழார் பாடியுள்ளார். முத்தமிழ்த் துறையில் முறை போகிய உத்தமக் கவிகளுக்கு ஒன்றுரைப்பேன் என்று கம்பர் பாடியுள்ளார். காவிய காலத்திலும், பிந்திய இலக்கிய காலகட்டத்திலும் தமிழையும் சைவத்தையும் இணைத்தே பாடியுள்ளனர். ஆகவே தமிழ் இன்றேல் சைவமில்லை; சைவமின்றேல் தமிழ் இல்லை; ஆகவே தமிழராக சைவநெறியில் வாழ்வது பெருமையிலும் பெருமை! இனிமையையும், அன்பையும் சமத்துவத்தையும், மனித நேயத்தையும் காட்டுவது சைவத்தமிழ் நெறி!

மூவேந்தர் போற்றிய தமிழ் நீதி சைவநீதி! ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற வாக்கு தமிழ் மொழியின் பரந்த நோக்கத்தையும் விரிந்த நல்லெண்ணத்தையும் தெளிவாக்குகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர், தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும், ஆன்மீக அன்பு நெறிக்கும், விஞ்ஞான ஆய்வுக்கும் உரிய மூவாயிரம் பாடல்களைப் பாடிப் பெருமை அளித்தவர். அத்தகைய திருமூலரே

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்;
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்று பாடியுள்ளார். நாம் சைவத்தையும் தமிழையும் இருகண்களாக கொண்டு போற்றுவோம்! சமத்துவ நெறியில் வாழ்வோம்; தெய்வத்தமிழ் வளர்ப்போம்; இறையருள் பெற்று இன்புற்று வாழ்வோமாக.

# பெரிய புராணத்தில் பண்பாட்டுச் சிறப்பு

- டாக்டர் பருத்தியூர் K. சந்தானராமன், M.A., D.Litt; Ph.D.

நமக்குச் சாதகமான இடங்களில் சில குறட் கருத்துக்களை எடுத்தாளுவோம். நாம் பொய்யுரைக்க வேண்டிய சூழ்நிலையில் ''பொய்மையும் வாய்மை இடத்த'' என வள்ளுவர் கூறியதைக் குறிப்பிடுவோம்.

அவ்வாறே விருந்தோம்பலில் எடுத்தாளப் படும் குறள் 'அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்'' என்பதாகும்.

''வாருங்கள்! வாருங்கள்! எங்கே இவ்வளவு தூரம்? போன முறை வந்த போதும் இரண்டு வேளை தங்கிச் சென்றுவிட்டீர்கள். இப்போதாவது...... '' என்று வந்த விருந்தினரை உபசரிப்பார்.

''சென்ற முறை உடனே புறப்பட வேண்டி யிருந்தது. அப்படியும் இரண்டு வேளை சிறப்பாக விருந்து கொடுத்துத்தான் அனுப்பினீர்கள். உங்கள் துணைவியாரும் விழுந்து விழுந்து' கவனித்தார்கள்''. என்று வந்தவர் புகழ்வார்.

''நாங்கள் என்ன பெரிதாகச் செய்து விட் டோம்? உங்கள் பெருந்தன்மை யாருக்கு வரும்? சென்ற முறை குழந்தையின் கையில் இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைத் திணித்து விட்டீர்கள். அதனை நாங்கள் இன்னும் மறக்கவில்லை. குழந்தை இருநூறு ரூபாய் மாமா எப்போது வருவார்? என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறான்'' இப்படித் தற்காலப் பொரு ளாதாரக் கண்ணோட்டத்தைக் குறிப்பாகக் கூறுவார் இல்லத்தரசி.

விருந்தினரும் விருந்தோம்பும் இல்லத்தின ரும் போலியாக ஒருவரையொருவர் புகழ்ந்து, உப சரித்துக் கொள்ளும் இந்த மனோபாவத்தை திருப்பூந் துருத்தி உபச்சாரம்' என்று தஞ்சை மாவட்டத்தில் குறிப்பிடுவர்.

திருப்பூந்துருத்தி உபச்சாரம் என்ற வழக்கின் பின்னணி வரலாறு பெரிய புராணத்தில் பொதிந் துள்ளதாகக் கூறுவார்கள். எப்படி?

அப்பர் பெருமான் திருவையாற்றை அடுத்த திருப்பூந்துருத்தி என்னும் திருத்தலத்தில் தங்கி உழவாரம் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டிருந்தார். திருஞானசம்பந்தர் அவரைக் காணத் திருப்பூந்துருத் திக்கு வந்து கொண்டிருந்தார்.

திருப்பூந்துருத்தி எல்லையில் அடியவர் கூட் டம் ஞானசம்பந்தரை வரவேற்கக் கூடியிருந்தது. கூட்டத்திடையே அப்பர் பெருமானைத் தேடினார் சம்பந்தர். அவரைக் காணவில்லை.

திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத் திக்கு
அருகாக எழுந்தருளி ''எங்குற்றார் அப்பர்?'' என
உருகா நின்று உம் அடியேன் உம் அடிகள் தாங்கி
வரும்
பெரு வாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற் றேன்''

என்றார்.

திருஞான சம்பந்தர் ஏறி வந்த சிவிகையை அடியவர்களுடன் அப்பர் பெருமானும் சுமந்து வந்து கொண்டிருந்தார். ''அப்பர் எங்கே?'' எனச் சம்பந்தர் கேட்டவுடன் தங்களைச் சுமந்து வரும் பெருவாழ்வு கிடைக்கப்பெற்றேன்'' என்று பல்லக்கின் கீழிருந்த படி பணிவாகக் குரல் கொடுத்தார் அப்பர்.

சம்பந்தர் அதனைக் கேட்டுத் துணுக்குற்றார். ''எண்பது வயதான முதியவரா எம்மைச் சுமப்பது? அதுவும் ஈசனின் அருட் தொண்டர்? அபச்சாரம் அல்லவா?'' என்று விரைவாகக் கீழே இறங்கினார். திருநாவுக்கரசரைப் பணிவுடன் வணங்கினார். அவரை முந்திக் கொண்டு அப்பர் வணங்கினார். அடியவர் கூட்டம் இறைவன் திருநாமங்களைக் கூறி ஆர்ப் பரித்தது. இதனைச் சேக்கிழார்:-

''பிள்ளையார் அது கேளாப் பெருவிரைவுடன்
இழிந்தே
உள்ளமிக பதைப்பெய்தி உடைய அரசினை வணங்க
வள்ளலார் வாகீசர் அவர் வணங்காமுன் வணங்க
துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெல்லாம்
ஆர்த்தார்''

அச்சமயச் சான்றோர்களின் பண்பாட்டு முதிர்ச்சி இதனால் புலப்படுகிறது. இருவரிடத்தும் பணிவே மேலிட்டு நின்றது. ஆணவம் சிறிதும் இல்லை. ஒருவர் பெருமையை மற்றொருவர் மதித் துப் போற்றுகின்றனர். போட்டி, பொறாமை அற்ற சமத்துவ நெறியே சமய ஒழுக்கத்தின் அடித்தளம் என் பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நமக்கு உணர்த் துகிறார் சேக்கிழார்.

திருநீலநக்கர் இல்லத்தில் சம்பந்தர் அடியார்களுடன் ஓர் இரவு தங்க வேண்டியிருந்தது. திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியாரும் தம்பதிகளாக வந்திருந்தனர். இங்கிதம் என்ற பண்பாடு அறிந்த சம்பந்தர் அவர்களுக்கு உரிய - ஏற்ற இடம் அளிக்க திருநீலநக்கரிடம் வேண்டினார்.

திருநீலநக்கர் தமது இல்லத்தில் வேதிகை (ஓமகுண்டம்) அருகே யாழ்ப்பாணர் தம்பதியர்க்குத் தங்க இடமளித்தார். சாதி வேறுபாடு கருதாத அடியவரின் சிறப்பைப் போற்றும் வகையில் திருநீலநக்கர் நாளும் அழலோம்பும் அவ்வேதிகை வலஞ்சுழித்து எரிந்தது என்கிறார் சேக்கிழார்.

சுந்தரர் சித்தவட மடத்தில் படுத்துக்கொண்டிருந்த பொழுது இறைவன் அவருக்குத் திருவடி தீட்சை அருள அங்கு வந்தார். முதியவர் வடிவில் வந்த சிவபெருமான் தம் திருவடி சுந்தரரின் தலைமீது படும் வகையில் காலை நீட்டிப் படுத்தார். தம் தலையில் உதைப்பது யாரென வினவினார் சுந்தரர். ஈசன் தமது மூப்பினால் திசையறியாமல் போய்விட்டது என்றார். அதனைக் கேட்ட சுந்தரர் முதியவரைக் கோபிக்காமல் தம்தலையை வேறு பக்கத்தில் வைத்துக் கொண்டார். முதியவர்களுக்கு உரிய மரியாதை அளிப்பது தமிழர்களின் பண்பாடு. இன்றும் அரசுப் பேருந்துகளில் முதியவர்களுக்கென தனி இருக்கை ஒதுக்கியுள்ளனர் அல்லவா? அப்பண்பாட்டைப் பின்பற்றிய சுந்தரரைச் சேக்கிழார் 'தமிழ்நாதன்' என்று சிறப்புடன் போற்றுகிறார்.

''பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே'' என பாரதி பாடினார் அல்லவா? தன்னைப் பகைவனாகக் கருதி இறுதி செய்தவனுக்கும் பாதுகாப்பு அளித்து மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று தொழுது வென்றார் மெய்ப்பொருள் நாயனார். பகைவனை மன்னிக்கும் பண்பாட்டுச் சிறப்பை இவ்வரலாற்றில் விரிவாகவே எடுத்துக்காட்டியுள்ளார் சேக்கிழார்.

சமயச் சான்றோர்கள், தன்னலம் கருதாத - பொன்னையும், பொருளையும், போகத்தையும் விரும்பாத நன்னெறியில் வாழ்ந்து வழிகாட்ட வேண்டும். வழிகாட்டுவோர் பண்பட்டவர்களாக இருந்தால்தானே சமுதாயத்துக்குத் தக்க வழிகாட்ட முடியும்? ஆகவே, சேக்கிழார் ''ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்'' அச்சான்றோர்களை நினைவு படுத்துகிறார்.

ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு, தன்னைத் தமிழ் விரகர் என்றும், தமிழ் ஞானசம்பந்தன் என்றும் தலைநிமிர்ந்து பதிகந்தோறும் பெருமைபடக் கூறிக் கொண்டார் திருஞானசம்பந்தர். சைவம், தமிழ், தமிழிசை, சமூகச்சீர்திருத்தம் எனப் பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட திருஞானசம்பந்தரைச் சேக்கிழார் பெரிதும் போற்றுகிறார்.

தமது பெரிய புராணத்தில் ஆயிரத்து இருநூற்று ஐம்பது பாடல்களைத் திருஞானசம்பந்தருக்கே ஒதுக்கிப் பாடி, தமிழர்களின் நன்றியுணர்வை வெளிக் காட்டியுள்ளார் சேக்கிழார்.

அடியார்களின் புனித வரலாறு உரைக்கும் நூல் பெரிய புராணம். எனினும் மனிதப் பண்பாட்டுச் சிறப்பை ஆங்காங்கே பொதிந்து வைத்துள்ளார் நம் சேக்கிழார் பெருமான்.

*(14.5.99 அன்று குன்றத்தூரில் நடந்த தெய்வச் சேக்கிழார் விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்.)*

★★★

## வினாவும் விடையும்

*(14-ஆம் பக்கத் தொடர்ச்சி)*

### விடைகள்

1) திருச்செங்காட்டாங்குடி
2) கற்பக விநாயகர்
3) திருக்கடவூர்
4) திருஞானசம்பந்தர்
5) மாற்று உரைத்த விநாயகர்
6) கணபதி அக்கிரகாரம் (தஞ்சை மாவட்டம்)
7) பொள்ளுதல் - உளியால் செதுக்குதல்; உளியால் செதுக்காமல் சுயம்புவாகத் தோன்றியவர்.
8) கஜமுகாசுரன்
9) ஔவையார்.
10) நம்பியாண்டார் நம்பி
11) விநாயகர் இரட்டை மணி மாலை
12) சோமகணபதி
13) தேனம்பாக்கம்
14) காவிரிநதி
15) பாபநாசம் (தஞ்சை மாவட்டம்)
16) மகாபாரதம்
17) அருந்ததி
18) 'கம்' என்று கிட
19) கடல் நுரை
20) மணற்குள விநாயகர்
21) கவிஞர் கண்ணதாசன்
22) மகாராஷ்டிரம்
23) காஞ்சிபுரம்
24) நர்த்தன விநாயகர்
25) மூலாதாரம்
26) நந்தனார்
27) சபரிமலை
28) முத்துசுவாமி தீட்சிதர்
29) விருத்தாசலம்
30) சித்தி, புத்தி, வல்லபை.




திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலில் 2.7.99 அன்று ஆகமப் பயிற்சி மையத்தைக் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் துவக்கி வைத்து ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தார்கள். வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல். அவர்கள் முன்னிலையில் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99



கும்பகோணம் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 1.7.99 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.